1129

786

துருக்கிதேசிய சபையின் தலைவரான

காஸி முஸ்தபா கமால் பாஷா

அவர்களின்

ஜீவிய சரித்திரம்.

மதுரை புதுமண்டபம் கமாலியாபுஸ்தகசாலை

மானேஜிங் புரோப்ரைட்டர்

இ. செ. முகமது இபுராகீம்
ராவுத்தர்

வெளியிட்டது

டைடில் பேஜ் மாத்திரம் மதுரை ஷம்ஸியா பி

பதிப்பிக்கப்பெற்றது

இரண்டாம்பதிப்பு

1923 விலை .

28 NOV 1923

07'.4196ய
N23
173019

786

மதுரை,

கமாலியா புத்தகசாலை,

மானேஜிங் புரோப்ரைட்டர்,

28 NOV 1923

ஜனப் இ. செய்யதுஇபுராஹீம் புலவர் குமாரர்

இ. செ. முகம்மது இபுராஹீம் ராவுத்தர்.

முகவுரை.

1914-ம் வருஷத்தில் ஆரம்பித்த ஐரோப்பிய மஹா யுத்தத்தில் துருக்கி ஜெர்மனியுடன் சேர்ந்ததினால் கான்ஸ்டாண்டி நோபிள் தவிர மற்ற மாகாணங்களை ஐரோப்பிய ராஜியங்கள் பங்கு போட்டதைக் கண்ட ஒரு எளிய குடும்பத்தில் பிறந்த காஸி முஸ்தபா கமால்பாஷா அவர்கள் குழப்பமடைந்திருந்த துருக்கியர்களை ஒற்றுமைப் படுத்தி ஸ்மர்னாவை வசப்படுத்திக் கொண்டு திரேஸை நோக்கி புறப்படும் பொழுது பின்னடைந்து ஓடும் கிரேக்கர்களின் வேண்டுகோளுக்கிணங்க லாஸேனில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி கீழத்திரேஸ் கான்ஸ்டாண்டி நோபிள் முதலிய தேசங்களை துருக்கியர் அடையும்படி செய்து துருக்கியை ஜனநாயக ஆட்சியாகிய குடியரசாக்கி அதன் தலைவராகவும் ஆகிவிட்டார். அவரது ஜீவியத்தை நமது தமிழ் நாட்டு நண்பர்கள் அறியவேண்டுமென்று அவர் பிறந்தது முதல் குடியரசு தலைவரானது வரையில் விபரமாக அச்சிட்டிருக்கிறது.

இதை வாசிக்கும் நண்பர்கள் தங்களால் இயன்ற மட்டும் அங்கோராநிதிக்குப் பொருள் உதவி செய்தும் துருக்கி குடியரசு தலைவரான காஸி முஷீர் முஸ்தபா கமால் பாஷாவின் நீடித்த ஆயுளுக்காகவும் தேகசுகத்துக்காகவும் அவருடைய மதவைராக்கியத்துக்காகவும் நாம் ஆண்டவனிடம் பிரார்த்திப்போமாக.

இந்நூலில் சொற்குற்றம் பொருள் குற்றம் ஏதாவது இருந்தால் அறிவுடையோர் அவைகளை எனக்கு எழுதினால் அடுத்த பதிப்பில் திருத்தி அச்சிடுகிறேன்.

மதுரை
4—11—23

இங்ஙனம்
இ. செ. முகமது இபுராஹீம்

1-நிர் மைசூர்கட்டையை மிஷினில் அரைத்த நயம் சந்தனமும், உயர்ந்த அத்தர் ஷர்பத் பன்னீர் முதலியவைகளும் நயமானதாய் கிடைக்கும்.

எம். மாலைக்கோனர்.

அத்தர் வியாபாரம்,

கீழாவணிமூலவீதி மதுரை.

தென் இந்தியாவில் உற்பத்தியாகக்கூடியதும், ரெங்கூன், பிணங்கு, சிங்கப்பூர், ஸிலோன் முதலிய நகரங்களுக்கு தேள்வையான சகலவிதமான சாமான்களும் சொற்ப கமிஷனுக்கு வாங்கி அனுப்புகிறேன்.

இ.-செ. முகமது இபுருஹீம்.

புத்தகவியாபாரம் புதுமண்டபம்

மதுரை (தென் இந்தியா)

786

காஸி முஸ்தபா கமால் பாஷா

அவர்களின்,

ஜீவிய சரிதை.

சுமார் 40 வருஷங்களுக்கு முன்பு 2-வது அப்துல் ஹமீது என்பவர் துருக்கி சுல்தானுக இருந்தார். அவரது தலைநகரம் கான்ஸ்டாண்டிநோபில். அப்பொழுது மாஸிடோனியா மாகாணத்தைச் சேர்ந்த சலோனிக்கா என்னும் துறைமுகப்பட்டணம் துருக்கி வசமிருந்தது அந்நகரத் துறைமுக கார்யாலயத்தில் ஒரு எளிய முகம்மதியர் கீழ்த்தர உத்தியோகஸ்தராயிருந்தார். சிலகாலம் அவர் ஒரு புகையிலை கிடங்கில் காவல் புரிந்துமிருந்தார். அவர் கர்நாடகப் பழக்க வழக்கங்களுடைய துருக்கியர். அவர் இம் மண்ணுலகின்கண் தமது மனைவியையும் சிறிய பெண் குழந்தையையும் 1880-ம் வருஷத்தில் பிறந்த கைக்குழந்தைப்பருவத்திலுள்ள ஓர் ஆண்மகவையும் விட்டு விட்டு உயிர் நீத்தார். அவருடைய குமாரத்தி நாளடைவில் வளர்ந்து துருக்கியர் வழக்கத்திற்கிணங்க ஒருவரை மணந்தார். தம்முடைய சிறிய ஆண்குழந்தை மரு

திப்பள்ளிக்கூடத்திலேயே படிக்கவேண்டுமென்று விதவை யான அத்தாய் உத்தேசங்கொண்டிருந்தார். அச்சிறு குழ ந்தையின் பெயர் முஸ்தபா.

பள்ளிப் பருவம்.

தன்னுடைய தாயாரின் கருத்துக்கிணங்க முஸ்தபா சலோனிக்காவிலுள்ள ஹைஸ்கூலில் சேர்ந்துகொண்டார். ஒருநாள் உபாத்தியாயர் பாடஞ் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுது அவர் வகுப்பிலிருந்த ஒரு சிறு குழந்தையுடன் சச்சரவு செய்துகொண்டிருந்தார். அவர் பெருங்கூச்சல் போட்டதால் உபாத்தியாயர் அவரை நையப்புடைத்தார். ஆதலால் அவர்பள்ளிக்கூடத்தை விட்டு அவரது வீட்டிற் குப்போய் விட்டார். அவரது பாட்டிக்கு அவரைப் பள் ளிக்கூடத்திற்கு அனுப்புவதிலேயே விருப்பங் கிடையாத படியால் இச்சம்பவத்தைத் தனது கட்சிக் காதாரமாகக் கொண்டு அதற்குப்பின் பள்ளிக்கூடத்திற்கே போக அனுமதிக்கவில்லை.

தேசிய நோக்கத்தின் வித்து தோன்றிய காலம்.

அவர் 10 வயதாக இருக்கும்பொழுதே வீரர்களைப் பெரிதும் வியக்கும் சக்தியை யடைந்தார். அவர் தெருக் களில் எப்பொழுதும் விளையாடிக்கொண்டிருப்பார். அப் பொழுது தெருக்களின் வழியாகச்செல்லும் துருக்கி ரா ணுவ உத்தியோகஸ்தர்களே அவரது மனதிற்குப்பிடித்த தலைவர்களாக விளங்கினார்கள். அவர்களுடைய உடுப்புக ளின் மேல் பிரியங்கொள்வார். அவர்களை வியந்து அவர் களைப்போலாகவேண்டுமென விரும்புவார். அவருடைய பக்

கத்து வீட்டுக்காரருடைய குமாரர் துருக்கி ராணுவ பள்ளிக்கூடத்திற்குப்படிக்கச் செல்லுவதாகக் கேட்டவுடன் அவரும் அதில் சேர்ந்து படிக்கவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டார். அவர் ராணுவ பள்ளிக்கூடத்திற்குட் போக வேண்டுமென்ற பிரேரணையை அவரது தாயார் அறவே கூடாதென்று மறுத்துவிட்டார். அவரது தாயாரின் ஆட்சேபணையையும் கவனியாது அவர் சலோனிக்காவிலுள்ள ராணுவ பள்ளிக்கூடத்தில் ராணுவத்தில் சேருவதற்காக வைக்கப்படும் பரீக்ஷையில் தேரி ராணுவ ஹைஸ்கூலில் சேர்ந்துகொண்டார். அவருடைய பெயரும் முஸ்தபா, அவருடைய கணித போதகாசிரியருடைய பெயரும் முஸ்தபா, இதனால் பெருங்குழப்பமேற்பட்டது. ஒரு நாள் அவரைப்பார்த்து நம்மிருவரில் ஒருவர் பெயரை மாற்றிக்கொள்ளவேண்டுவது அவசியம் ஆதலால் உன்னுடைய முதற்பெயரான முஸ்தபா என்றதுடன் கமால் என்ற வார்த்தையைச் சேர்த்துக்கொள். ஆதலால் உன்னை எல்லோரும் முஸ்தபா கமால் என்று அழைப்பார்கள்" என்று கூறினார். இதுதான் அவரது தற்காலப் பெயருக்குக் காரணமாக இருந்தது. கமால் என்ற வார்த்தைக்கு துருக்கிப்பாஷையில் பூரணம் என்று பொருள். அவர் பள்ளிக்கூடத்தில் நீதியாகவும் ஒழுங்காகவும் நடந்து கொண்டதற்காக இப்பெயர் கிடைத்தது.

முஸ்தபா கமால் சலோனிக்காவிலுள்ள ராணுவப் பயிற்சியை முதலில் கற்றுக்கொடுக்கும் ஹைஸ்கூலில் கற்றபின் மொனஸ்டரிலுள்ள உத்தியோகஸ்தர் பதவிக்குப் பழக்கும் பள்ளிக்கூடத்திலும் கான்ஸ்டாண்டிநோபிலுள்ள

யுத்த சாஸ்திர போதனா சாலையிலும் படித்துத் தேறினார். அப்பொழுது அவருக்கு வயது 22. உடனே அவருக்கு லெப்டினெட் பதவியளிக்கப்பட்டது.

மொனாஸ்டரிலிருந்து காண்ஸ்டாண்டிநோபிலுள்ள யுத்தசாஸ்திர போதனா சாலைக்கு முஸ்தபா கமால் வந்து சேர்ந்ததும் அந்தப் பள்ளிக்கூடத்தில் ரகசியமாய் நடந்து வந்த ராஜீய விவாதங்கள் அவரது இளம் மனதைக் கவர்ந்து விட்டது. நாமிக் கமால்பேயினால் எழுதப்பெற்ற "வதான்" (தாய்நாடு) என்ற நாடகத்தின் நகலொன்று அவருக்கு கிடைத்தது. இப்புத்தகத்தை கண்ட விடத்தெல்லாம் பறிமுதல் செய்து எரிக்கும்படி அப்துல் ஹமீது (சுல்த்தான்) உத்தரவிட்டிருந்தார். அப்துல் ஹமீது சர்வாதிகாரமுள்ள அரசாங்கமிருக்கவேண்டுமென்ற கொள்கையை உடையவர். மேனாடுகள் சர்வாதிகாரமுள்ள அரசாங்க முறையை கைவிட்டு வரும்பொழுதே அப்துல் ஹமீது சர்வாதிகாரியாயிருந்து கீழ் நாடுகளில் ஆட்சிபுரிந்துவந்தார். அவர் ஒற்றர்களை சிருஷ்டி செய்து அவர்களால் தமது சர்வாதிகாரமுள்ள ஆட்சியானது நிலைத்து நிற்கும்படி செய்துகொண்டார். அவரது காலத்தில் துருக்கியப் பிரஜைகளில் எவரேனும் ஒருவர் பிரெஞ்சு ராஜீயப் புரட்சியைப் பற்றி கேள்விப்பட்டிருக்கின்றனர் என்று சிறிது சந்தேகிக்கப்பட்டாலே போதும். அவரது உயிருக்காவது அல்லது சுதந்தரத்திற்காவது கட்டாயம் ஹானி வந்தே தீரும். துருக்கியர்களில் சிறந்தவர்கள் ராணுவத்தில் சேர்ந்தவர்களாயிருப்பது சகஜம். ராணுவங்கள் இரண்டு விதமான தோற்றத்தைக் கொடுக்கக் கூடி

யவையாயிருக்கும்படி இம்முறை செய்துவிட்டது மேலாக பார்த்தால் அவை சிறந்த படைகள் போன்றிருக்கும். ஆனால் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்தால் தடுக்கப்பட்ட ராஜீயக் கொள்கையைக் கொண்ட பலர் இருப்பதைக் கண்டு கொள்ளலாம்.

நாமிக்கமால்பே நவீன இலக்கிய ஆசிரியர்களுள் உயர் பதவி வகித்தபோதிலும் அவர் இங்கிலாந்திற்கு ஓடிப்போய் தமது அந்திய காலத்தைக் கழிக்கும்படி கட்டாயப்படுத்தப்பட்டார். வதான் என்ற புத்தகத்தை படித்ததாகத் தமது ஒற்றர்களால் சந்தேகப்பட்டவர்களை எல்லாம் அப்துல்ஹமீது கான்ஸ்டாண்டி நோபிலை விட்டு துரத்திவிட்டார். ஆனால் வதான் என்ற புத்தகத்தை படித்த பின்புதான் முஸ்தபா கமாலுக்கு மேனாட்டு அரசாங்க முறையில் சற்று ஆசை உண்டாயிற்று. அதனால் அவர் அந்தரங்கத்தில் அப்துல் ஹமீதின் பெரும் விரோதியாக இருந்தார். வதான் என்ற புத்தகத்தை ரகசியமாகப் படிக்கவேண்டியிருப்பதால் தனது அரசாங்கத்தில் ஏதோ சில தவறுகளிருப்பதாக முஸ்தபா கமால் தெரிந்துகொண்டார். ராஜீய விஷயங்களிலும் குடும்ப விஷயங்களிலும் சங்கங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் சர்வாதிகார முறைகள் கையாளப்பட்டு வந்ததால் அம்முறையானது தனது தேசத்தின் எதிர்கால க்ஷேமத்திற்கும் ஜனங்களின் நலத்திற்கும் விரோதமாக இருந்ததென்று எண்ணினார்.

ரகசிய சபைகள்.

இவ்வுண்மையை அறிந்துகொண்டதும் அவரது சிநே

திமாணவர்களுக்கு அதனை எடுத்துரைத்து ஒரு சிறிய ரகசிய சங்கத்தைச் சேர்த்தார். பள்ளிக்கூடத்திற்குள் ரகசியமாக உலாவும் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தார். அவர் சபையின் தலைவராகவும் பத்திரிகைகளில் வியாசங்கள் எழுதுவதில் பிரதமமாணவராகவும் இருந்தார். கொஞ்சகாலத்திற்கெல்லாம் அவர்களது வேலையை அப்துல் ஹமீதின் ஒற்றர்கள் கண்டு பிடித்து அரசாங்கத்திற்கு அறிவித்து விட்டார்கள். மாணவர்கள் இம்மாதிரியான செயல்களை திருப்பிச் செய்யாமலிருக்கும்படி பார்த்துக்கொள்ளும்படி பள்ளித்தலைவர் எச்சரிக்கை செய்யப்பட்டார். ஆனால் அவர்கள் நகரில் ஜன நெருக்கமில்லாத ஒரு பாகத்தில் ஒரு சிறிய வீட்டை வாடகைக்கமர்த்தி அதில் அவர்களது சங்கத்தை இடைவிடாது ரகசியமாக நடத்திவந்தார்கள். ஒரு நாள் எளியவர் என்று சொல்லிக்கொண்ட ஒருவர் அவர்களது உதவியைக் கோறினர். அவர் தான் பழைய ராணுவ உத்தியோகஸ்தரென்றும் தனக்கு உண்ண உணவும் படுக்க இடமும் இல்லை என்றும் கூறினர். அவர்கள் இவரை தங்களது சங்கத்தின் வீட்டில் படுத்துக்கொள்ளும்படியாகவும் சொல்லி உண்ண உணவும் கொடுத்தார்கள். இரண்டு தினங்களில் அவர்கள் எல்லோரும் கைது செய்யப்பட்டு எல்டிஸ் கியோக் என்ற இடத்திலிருந்த அப்துல் ஹமீதால் விசாரித்து தண்டிக்கப்பட்டார்கள். முஸ்தபா கமால் போலீஸ் இலாகா மந்திரியின் கார்யாலய காவலறை யொன்றில் மூன்றுமாதகாலம் சிறைவைக்கப்பட்டார். எளியவர் என்று சொல்லிக்கொண்டவர் அப்துல் ஹமீதின் ஒற்றர்கள். பிறகு முஸ்தபா கமால் சிரியாவைச் சேர்ந்த டமாஸ்கஸ் என்ற

இடத்திலிருந்த குதிரைப் படையுடன் சேர்ந்து கொள்ளும் படி தேசப்பிரஸ்டம் செய்யப்பட்டார்.

அவர் அங்கு அவரைப்போன்ற துற்பாக்கியம் வாய்ந்த ஒரு வியாபாரியைப் பார்த்தார். அவர் தான் கான்ஸ்டாண்டிநோபில் வைத்தியப் பள்ளிக்கூடத்தில் அரசாங்கத்திற்கு விரோதமான ராஜீய வேலைகளை செய்து வந்ததினால் தேசப்பிரஸ்டம் செய்யப்பட்டதாகக் கூறினார். இருவர்களும் சிநேகிதமாகி "சுதந்தரச் சங்கம்" என்ற பெயருள்ள ஒரு ரகசிய சபையை ஸ்தாபித்தார்கள். ஜனங்களுக்கு ஜன நாயக ஆட்சியின் அவசியத்தை எடுத்துக்காட்டுவதற்காக பிரசாரம் செய்வதையே அவர்களது நோக்கமாகும். சில நாட்களில் அவர்களது சங்கம் சிரியா முழுவதும் பரவிவிட்டது. பெயிரட், ஜாபா, ஜெருசலம் முதலிய முக்கிய நகரங்களிளெல்லாம் அவர்களது கிளைச்சங்கங்கள் இருந்தன.

சிரியர்களைவிட மாஸிடோனியா வாசிகள்தான் ஜன நாயகக் கொள்கையை அனுஷ்டிக்கத் தயாராக இருப்பதாக முஸதபா கமாலுக்கு தெரிந்தது. துருக்கியில் ராஜீயபுரட்சி ஏற்படவேண்டுமானால் ஐரோப்பாவிலுள்ள துருக்கியில் தான் நடக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார். ஆதலால் சலோனிக்காவிற்கு செல்ல விரும்பினார். ஆனால் சிரியாவை விட்டுப்போக அவருக்கு அனுமதியில்லை. அச்சமயம் சலோனிக்காவில் கவர்னராக ஷூக்ரிபாஷா இருந்தார் (இவர் பல்கேரியா யுத்தத்தில் அட்ரியா நோபிலை பல்கேரியர் கைப்பற்ருது தடுத்து புகழ்பெற்றவர் இவர் 1914-ம் வருஷத்தில் இறந்து போனார்.) இவர் தாராள மனது படைத்

தவரென்று அவருக்கு தெரியுமாதலால் தனது நோக்கங் களை ஒரு கடிதத்தில் எழுதி தனக்கு உதவி செய்ய முடியுமா என்று கேட்டார். அவர் அதற்கு நேரான பதில் அளிக்கவில்லை. ஆனால் அவர் அந்நோக்கங்களை பொதுவில் ஏற்றுக்கொள்வதாகவும் தம்மால் கூடியவரை உதவி செய்வதாகவும் தெரிவித்தார். இவ்வாக்குறுதியால் சற்று தைரியமுற்ற முஸ்தபா கமால் சிரியாவை விட்டு எகிப்து கிரீஸ் முதலிய தேசங்களின் வழியாக மாறு வேஷத்துடன் சலோனிக்காவிற்குப் போனார். ஷுக்ரிபாஷா முஸ்தபா கமாலை கண்டுபேச அனுமதிக்கவில்லை. ஆனால் முஸ்தபா கமாலுடைய வேலைகளை தாராளமாகச் செய்யவிடாது அவர் தடுக்கவுமில்லை. அதிகமாகச் செய்யும்படி உதவி செய்யவுமில்லை. முஸ்தபா கமால் சற்று ஏமாற்றமுற்றார். அவர் யாதொரு வேலையுஞ் செய்யாது நாலு மாதங்களை கழித்தார் பிறகு அவரது பழைய சிநேகிதர்களைப் பார்த்து அவரது வேலைத்திட்டங்களை எடுத்துரைத்தார். தீரமுள்ள அவ்வாலிபர்கள் அவருடைய பிரேரணையை ஒப்புக்கொண்டு ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார்கள். இவ்வாறிருக்க தன்னை துருக்கி அரசாங்கத்தார் தேடிக்கொண்டிருப்பதாகவும் உடனே சிரியாவிற்கு வரும்படியாகவும் அவருக்கு சிலரால் அறிவிக்கப்பட்டது. ஆனதால் சங்க நிர்மாண வேலையை தனது சிநேகிதர்களிடம் விட்டுவிட்டு சிரியாவிற்கு திரும்பிச்சென்றார். சிரியாவின் ஓர் பாகத்தில் ஒரு சிறு கலகம் நடந்ததாகவும் அதை தான் அடக்கப்போனதாகவும் துருக்கி அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தினார். சுமார் மூன்று வருஷகாலம் சிரியாவிலேயே இருந்தார். இதற்குள் சகல விரோதமும்

மரந்துபோய் விட்டபடியினால் தனது வீட்டிற்குத் திரும்பிச் செல்ல அனுமதிகேட்டார். ஏதோ அபூர்வமாக எளிதில் அனுமதி கிடைத்தது. அவர் சலோனிக்காவிற்கு வந்ததும் சுதந்தரச் சங்கத்தின் பெயர் "ஐக்கிய முன்னேற்ற சங்கம்" என்று மாறியிருப்பதாக தெரிந்தது. டாக்டர் நாஸிம்பே சலோனிக்காவிற்கு வந்ததும் தான் பாரிஸில் நிர்மானித்துள்ள சங்கத்தின் பெயரை அவர்களது சங்கத்திற்கு வைத்து நடத்தி வந்ததாகத் தெரிந்து கொண்டார். இதுசாறும் ருஷ்யாவிற்கு விரோதமாக அப்துல் ஹமீது செய்து வந்த முயற்சிகளுக்கு ஆதரவளித்துவந்த கிரேட் பிரிட்டன் 1907-ம் வருஷம் திடீரென்று ருஷ்ய சக்கரவர்த்தியுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டது. பால்யத்துருக்கியர்பிரிட்டிஷாரின் உதவியைப் பெற முயர்ச்சிசெய்தார்கள். அவர்கள் இணங்கமாட்டார்களென்று தெரிந்து கொண்டதும் 1908-ம் வருஷம் திடீரென்று துருக்கியில் ராஜீய கலகம் செய்தார்கள். அந்த ராஜீயக்கலகத்தின் 3-வது படையின் தலைவராக இருந்த முகம்மது ஷௌகத பாஷாவின்கீழ் யுத்தத்தை நடத்துவதற்கு யுக்திகள் கூறும் உத்தியோகஸ்தர்களுள் ஒருவராகமுஸ்தபாகமால்இருந்தார். இந்த ராஜீய கலகத்தால் ஸுல்தான் அப்துல்ஹமீது சர்வாதிகாரியாயிருந்து அரசாட்சி புரிவதை இழக்கநேரிட்டது 1909-ம் வருஷம் அவர் போட்டியாக கலகம் செய்ய முயன்றார். அதனால் அவர் சிம்மாசனத்திலிருந்து இறக்கப்பட்டார் பிறகு சட்டப்படி ஒரு அரசாங்கத்தை ஸ்தாபித்தார்கள்.

ராஜீய புரட்சியில் ராணுவமே சரியான வேலை செய்தது. ராணுவ உத்தியோகஸ்தர்கள் ராணுவ புரட்சியில்

தலைவர்களாகவிருந்தார்கள். இதனால் ராணுவமானது சீர் கெட்டுப்போயிற்று. ராஜீய விஷயங்களில் ராணுவ உத்தியோகஸ்தர்கள் தலையிட்டுக்கொள்வதைத் தடுக்க முஸ்தபா கமால்செய்த பிரேரணையை அனுதாபத்துடன் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ராஜீய புரட்சி ஏற்பட்டபிறகு துருக்கி ராணுவமானது திருத்தி அமைக்கப்பட்டது. முஸ்தபா கமாலும் இலைத்பாஷாவும்சேர்ந்து இவ்வேலையைச்செய்தார்கள்.

சலோனிக்காவில் ஐக்கிய முன்னேற்ற கமிட்டியின் காங்கிரஸ் கூடியபொழுது முஸ்தபா கமாலுக்கும் அன்வர் பாஷாவுக்கும் அபிப்பிராய பேதங்களேற்பட்டது. அன்வர் பாஷா அப்துல்ஹமீதின் கொள்கையுடையவர். அப்பொழுது தேசத்தில் அன்வர்பாஷாவுக்கு ஆதிக்கம் அதிகரித்திருந்ததால் முஸ்தபாகமால் மிக்க வெறுப்படைந்து ராஜீய விஷயங்களில் தலையிட்டுக்கொள்வதை நிறுத்திவிட்டார்.

முஸ்தபா கமால் கான்ஸ்டாண்டிநோபிலில் இருக்கும்பொழுது இத்தாலிதுருக்கியுடன் யுத்தம் செய்பதம்தொடங்கி யிருப்பதாக அறிவித்தது யுத்தத்தில் கலந்துகொள்வதற்காக அவர் மாறுவேடத்துடன் டிரீப்போலிக்குச்சென்றார் அங்கு பெங்காசிப்போர் முனையில் துருக்கிப்படைகளுக்கு தலைமை வகித்து படை எடுத்துவரும் இத்தாலியப் படைகளை எதிர்த்துக் கொண்டிருக்கையில் பால்கன் யுத்தம் ஆரம்பித்தது. தன்னுடைய தாய்நாடு தாக்கப்படும்பொழுது டிரிப்போலியில் ஏகாதிபத்திய ஆசைக்காகச் சண்டை செய்வது மிக்க கேவலமானதென்று நினைத்து கான்ஸ்டான்

டிரோபிலுக்குச் சென்றார். அப்பொழுது பல்கேரிய படைகள்கலிபோலியில் இருந்தன. முஸ்தபா கமால் கமாண்டராக நியமிக்கப்பட்டு உடனே போர்முனைக்கனுப்பப்பட்டார். அவரது படைகள் எதிரிகளைத்தாக்கி முன்னேறிச் சென்று பலஸ்தலங்களை திரும்பப் பிடித்துக்கொண்டது அவைகளுள் டெமேடோக்கா என்ற நகரம் முக்கியமானது. பிறகு டார்டனல்ஸ் ஜலசந்தியைக் காக்கும்படி முஸ்தபா கமால் நியமிக்கப்பட்டார். அதன் பிறகு அட்ரியாநோபிலை திரும்பப் பிடிக்கச்சந்தர்ப்பம் ஏற்பட்டபொழுது முஸ்தபா கமாலே அனுப்பப்பட்டார்.

1914-ம் வருஷம் துருக்கி ஜெர்மனியுடன் சேர்ந்து கொண்டபொழுது முஸ்தபா கமால் சோபியாவிலுள்ள துருக்கித் தூதரின் பாதுகாப்பிற்காகஏற்பட்ட படையின் தலைவராக நியமிக்கப்பட்டார். அங்கு ஒரு வருஷகாலங் தங்கியிருந்தார்.

மகாயுத்தமும் முஸ்தபா கமாலும்.

யுத்த ஆரம்பத்திலிருந்தே துருக்கி யுத்தத்தில் கலந்து கொள்ளக்கூடிய நிலைமையில் இல்லை என்று முஸ்தபாகமால் அபிப்பிராயப்பட்டார். ஆயினும் அன்வர் பாஷா முஸ்தபா கமாலை 19வது படையின் தலைவராக நியமித்து டார்டனல்ஸ்க்கு அனுப்பினார். இவ்விடத்தில்தான் முஸ்தபா கமாலுக்கு ராணுவத்தை நடத்துவதில் திறமையுண்டென விளங்கிற்று. தீபகற்பத்திலுள்ள துருக்கியபடைகள் ஜெர்மன்படைகள் இவற்றின் தலைவராக நியமிக்கப்பட்டார். அனபோர்ட்டா என்ற விடத்தில் முஸ்தபாகமால் பிரிட்டிஷாரைத் பின்

வாங்கும் படி செய்து பெரியவெற்றியடைந்தார். இவ்வெற்றியை ஜெர்மனியிலுள்ளவர்கள் கேள்விப்பட்டதும் முஸ்தபா கமால் ஒரு பெரிய வீரர் என்று கொண்டாடினார்கள். 1917-ம் வருஷம் ஐக்கிய முன்னேற்ற கமிட்டியின் வருடாந்தர அறிக்கையில இவ்வெற்றியைப்பற்றிய விருத்தாந்தங்கள் வெளிவரும் வரை கான்ஸ்டாண்டிநோபிலில் இவ்வெற்றி தெரியவராமலிருந்தது; தெரிந்ததும் துருக்கியப்பத்திரிக்கைகள் அனபோர்டா வெற்றியைப்பறறிய கதைகள் அச்சிடலாயின. இவ்வெற்றியினால் முஸ்தபா கமாலுக்கு "பாஷா" என்ற பட்டம் கிடைத்தது.

முஸ்தபா கமால் ஜனங்களிடையே மிக்க பிரபல்லியமாக இருக்கின்றதைக்கண்ட சிமன்வான் சாண்டர்ஸ் (ஜெர்மனியர்) ஸ்ட்ரெயிட்ஸ் ஜலசந்தியை பிரிட்டிஷார் காலி செய்தவுடன் முஸ்தபா கமாலை ருஷ்ய போர்முனைக்கு மாற்றிவிட்டார். அங்கு அவர் 16-வது படையின் மேஜர்ஜெனரலாக நியமிக்கப்பட்டார். பிரிட்டிஷாரிடமிருந்து பகுதாதை திரும்பப்பிடித்துக் கொள்வது சம்பந்தமாக முஸ்தபா கமாலுக்கும் பால்ஹன் ஹேயனுக்கும் அபிப்பிராயபேதங்கள் ஏற்பட்டது உடனே அவர் உத்தியோகத்தை விட்டுவிட்டு எல்ஸ்போவிற்கு திரும்பிவந்தார்.

1917, செப்டம்பர், 30உ முஸ்தபா கமால் அன்வர்பாஷாவுக்கு ஒரு பெரிய ஸ்டேட்மெண்டு எழுதிஅனுப்பினர் ஜெர்மனியர் முன்னேறிக்கொண்டிருக்கும்பொழுது எழுதப்பட்டது. அதில் கான்ஸ்டாண்டிநோபிலிலிருக்கும் கவர்மெண்டில் நடக்கும் அதிக்கிரமங்களேயும் தேசத்தின் பொரு

ளாதார நிலைமை சீர்குலைந்திருப்பதையும் தேசத்திலுள்ள தங்கமானது அடிக்கடி ஜெர்மனிக்கு அனுப்பபப்படுவதை யும் பற்றி எழுதி இதெல்லாம் துருக்கிக்கு அழிவையே உண்டாக்குமென்றும். கூறியிருக்கின்றார். கிரேட்பிரிட்டனையும் பிரான்சையும் பிரிக்கமுடியாதென்றும் அவற்றை தோற்கடிக்கமுடியாதென்றும் கிரேட்பிரிடன் பாலஸ்தீனத்தை வென்று அங்கு தனது மேற்பார்வைக்குட்பட்டிருக்கும் ஒரு கிருஸ்தவ அரசாங்கத்தை ஸ்தாபிக்குமென்றும் அதனால் சூயஸ்கால்வாய், செங்கடல் எகிப்து, இவற்றை தனது ஆதிக்கத்திற்குள் வைத்துக்கொண்டு துருக்கியுடன் மற்ற இஸ்லாமிய ராஜ்ஜியங்களுக்கு சம்பந்தமில்லாதபடி செய்யுமென்றும் குறிப்பிட்டிருப்பதுடன் பின்வருமாறு எழுதியுள்ளார்:- நாம் இங்கிலாந்திற்கு விரோதமாக அநாவசியமாக யுத்தத்திலிறங்கும்படியாகச் செய்யும் பிடிட்டிஷ் யுத்க்கொள்கையானது வெற்றியுற்றால் நமக்கு மிக்க நஷ்டத்தையுண்டாக்கும். இங்கிலாந்து தோல்வியுற்றால் துருக்கியில் ஜெர்மனியருக்கு ஆதிக்கமேற்படும். பால்ஹன் ஹாயண் தமக்குச்செவிசாய்த்துக்கேட்கின்றவர்களிடமெல்லாம் தாம் ஜெர்மனியரென்றும் ஆதலால் இயற்கையாகவே ஜெர்மனியில் மிக்க சிரத்தைகொண்டிருப்பதாகவும பாலஸ்தீனத்தை எதிரிகள் பிடிக்கமுடியாமல் பாதுகாக்கத் தம்மால் கூடுமானல் தாமே யுத்தத்தில் வெற்றிமாலை சூடிய மகா வீரர்களுள் ஒருவரென்றும் நமது நாட்டிலும் உலகிலுந் தெரியும்படி செய்து கொள்வேனென்றும் கூறுகின்றார். அப்பொழுது நாமே நம்முடைய தேசத்தை இழந்துவிடுவோம். இம் முடிவை அடைவதற்காக நம்மை உபத்திர

வப்படுத்தி எவ்வளவு தங்கத்தையும் சிப்பாய்களையும் பெறக்கூடுமோ அவ்வளவையும் பெற்று அவற்றை எல்லாம் தியாகம் செய்வார். அன்வர் பாஷா இதை கவனிக்கவில்லை உடனே அவர் பால்ஹறன் ஹாயனே பாலஸ்தீனப்போர் முனை யில் தளகர்த்தராக இருக்கும்படி செய்தார் அப்பொழுது துருக்கி இளவரசர் ஜெர்மெனியில் இருந்தார் அவருடைய பாதுகாப்பிற்காக ஏற்பட்ட படையின் தலைவராக இருக் கும்படி முஸ்தபா கமாலை நியமித்தார். இதை மற்றொரு தேசப்பிரஷ்டமென்றே சொல்லலாம். முஸ்தபா கமால் ஜெர்மெனி, ஆஸ்திரியாஹங்கேரி முதலிய விடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டு ஒரு வருஷத்தைக் கழித்தார். அவர் செய்த எச்சரிக்கை எவ்வளவு சிறந்த தென்று இப்பொழுது தெளிவாகத் தெரிய வந்தது. உட னே அன்வர் பாஷா முஸ்தபா கமாலை திருப்ப அழைத்து 4, 7, 8-வது படைகளின் தலைவராக நியமித்து பாலஸ்தீனப் போர் முனைக்கனுப்பினார்.

முஸ்தபா கமால் தனக்கு குறிப்பிடப்பட்ட ஸ்தலத் தை அடைந்தது தான் தாமதம் ஜெனரல் அல்லன்பி எதிரி களது படையை தோற்கடித்து ஏகாதிபத்தியத்தை அழி ந்து போகும்படி செய்து விட்டார். முஸ்தபா கமால் பின்ன டைந்து ஓடுகின்ற படைகளை அட்ன என்ற இடத்தில் நிறு த்திவைத்தார். அப்பொழுது கான்ஸடாண்டிநோபிலிருந்து வந்த ரகசியத் தந்தியொன்று பிரிட்டிஷாருடன் யுத்தநிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்வதற்காக மூட்ராவிக்கு ரெயூப்பே புரப்பட்டு போவதாகத் தெரிவித்தது. 1918-ம் வருஷ கடைசியில் யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்யப்பட்டது.

முஸ்தபா கமால் கான்ஸ்டாண்டிநோபிலுக்கு திரும்பி வந்த பொழுது அது மிகவும் குழப்பமுற்ற நிலைமையிலிருப்பதைக் கண்டார் ஐக்கிய முன்னேற்ற கமிட்டி இருக்கின்ற விடம் தெரியவில்லை. முன்பு அரசாங்கத்தை எதிர்க்கும் கட்சியிலிருந்தவர்கள் தலை எடுத்து தலாத், அன்வர்பாஷாக்களுக்கு பதிலாக தமாத்பெரைத் பாஷாவை நியமிக்க முயன்றுகொண்டிருப்பதை பார்த்தார் துருக்கிப் பார்லிமெண்டு கலைக்கப்பட்டது.

தலைவரின்றி தலைநகரமானது குளப்பத்தில் அகப்பட்டு தத்தளித்தது. கான்ஸ்டாண்டிநோபில் பிரா, கலடா என்ற பகுதியில் பிரிட்டிஷ் படைகளும் இஸ்தம்பூல் பகுதியில் பிரெஞ்சு துருப்புகளும் ஆசியாவிலுள்ள கடற்கரைப் பிரதேசங்களில் இத்தாலிய படைகளும் பாஸ்பரஸில் மூன்று நேச தேசத்தினர்களுடைய யுத்தக் கப்பல்களும் இருந்தன ஐரோப்பாவிலுள்ள துருக்கியின் ரயில்வேக்களை பிரஞ்சுத் துருப்புகள் வசமும் ஆசியத் துருக்கியிலுள்ள ரயில்வேக்களை பிரிட்டிஷ் துருப்புகளும் வசப்படுத்திக்கொண்டன. டிரான்ஸ் காகேஸியா, மெசபொடோமியா சிரியா மத்தியதரைக் கடல் கருங்கடல் இவற்றிலுள்ள துறைமுகங்களை பிரிட்டிஷ் படைகள் சூழ்ந்திருந்தன துருக்கியின் பொருளாதார நிலைமை மிகவும் கேவலமானது. முகமூடியில்லாமல் வீதிகளில் நடவாத இளந்துருக்கியப் பெண்கள் தங்களது வறுமையினால் கந்தைத் துணிகளையுடுத்தி வீதிகளில் தோட்டி வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

துருக்கிக்கு ஏற்பட்ட துர் அதிர்ஷ்டமான நிலைமையானது துருக்கியிலுள்ள எல்லா ஜாதியாருக்கும் ஏமாற்றத்

தை அளித்தது. தலைவர்கள் எல்லோரும் பீதி அடைந்திருந்தார்கள். ஜனங்கள் மிக்க மனக்குழப்பமடைந்திருந்தார்கள். இந்நிலைமையில் சமாளிக்கக்கூடியதொரு சங்கத்திற்கு ஜனங்களின் ஆதரவுவேண்டுவது அவசியமென்று முஸ்தபா கமால் கருதினார். ஆதலால் ஜனங்களிடம் சென்று அவர்களுடன் வேலைசெய்யவேண்டிய அவசியமாக இருந்தது. இந்த வேலை கான்ஸ்டாண்டி நோபிலில் செய்யவேண்டியதில்லை. 1919-ம் வருஷம் மார்ச்சுமீ 9௳ பானர் என்றவிடத்திலிருந்த நேச தேச படைத்தலைவர்கள் தங்களுக்கும் துருக்கிக்கும் இருந்த சம்மந்தங்கள் நீங்கிவிட்டதாக தெரிவித்துவிட்டார்கள் அதனால் ருஷ்யாவிற்கு பதிலாக கிரேக்கர்கள் பிரிட்டிஷாருடன் சேர்ந்துவிட்டதாக தெரிந்தது.

யுத்தநிறுத்தம் நடந்த மூன்று மாதங்களுக்கப்பால் துருக்கிய படைகள் நேசதேசத்தார் வசம் ஒப்பிவிக்கப்பட்டது. துருக்கிய கடற்படையானது சரணடைந்தது. துருக்கியரின் ஆயுதங்கள் பறிக்கப்பட்டு உடைக்கப்பட்டது. கான்ஸ்டாண்டி நோபிலைத் தவிர மற்ற பாகங்களை எல்லாம் துருக்கியிடமிருந்து அபகரித்து சகலரும் பங்கு போட்டுக் கொண்டார்கள்.

ஆனால் முஸ்தபா கமால் இக் கஷ்டங்களைக்கண்டு பயந்துவிடாமல் ஊக்கத்துடன் ஜனங்களை ஒற்றுமைப்படுத்தி தேசீய சபையை ஸ்தாபித்து அதன் மூலம் ஸெவர்ஸ் உடன்படிக்கைப்படி நடக்காதபடி பார்த்துக்கொள்ளலாம் என்று நினைத்தார். மாகூஷிமை தங்கிய ஸுல்தான் வஹிதுத்தீன் கான் அவர்கள் நிலைமை மிக்க அபாயமுள்ளதாகவும் அவரு

க்கு வேறு வழியில்லாததாலும் நேச தேசத்தாரின் வசப் பட்டிருந்தார் மூன்று மாதத்திற்குள் முஸ்தபா கமால் போட்டிருக்கும் திட்டத்தை சுல்த்தானிடம் தெரியப்படுத்தி அவரது அனுதாபத்தையும் பெற்றார்.

சம்பவிக்க இருக்கின்ற அழிவைத் தடுப்பதற்காக பிளவுபட்டும் குழப்பமடைந்தும் இருக்கும் கான்ஸ்டாண்டிநோபில் வாசிகளை ஒருங்கு சேர்ப்பது பிரயோஜனமற்ற காரியமென்பதை முஸ்தபா கமால் தெரிந்து அவ்விடமிருந்து ஆசியாத்துருக்கிக்குப் போனார். பார்லிமெண்டை மீண்டும் கூட்டி தேசத்தின் எதிர்கால நிலைமையைப்பற்றி ஆலோசிக்கும்படி தமாத்பெரைத் பாஷாவை கட்டாயப்படுத்தும்படி ஒரு புதிய ராஜீய கட்சியை ஸ்தாபிப்பதற்காக அவர் அங்கு போனார். முஸ்தபா கமாலின் நடவடிக்கைகளை அறிந்த நேசதேசத்தார் அவரை உடனே கான்ஸ்டாண்டிநோபிளுக்கு வந்து சேரும்படி சுல்த்தான் கவர்ன்மெண்டு மூலம் உத்திர விட்டார்கள். முஸ்தபா கமால் உத்திரவை நிராகரித்து விட்டார். பெரைத் பாஷா அவரை ராணுவ வேலையினின்றும் நீக்கிவிட்டார். பெரைத் பாஷாவின் கீழ் ஆசியாத் துருக்கியிலிருந்த மாகாண உத்தியோகஸ்தர்கள் முஸ்தபா கமாலின் ஏஜண்டுகளை கைது செய்து கான்ஸ்டாண்டிநோபிளுக்கு அனுப்பினார்கள். உடனே கமாலின் சிநேகிதர்கள் பெரைத் பாஷாவின் உத்தியோகஸ்தர்களை கைது செய்து தங்களது கட்சியினரை நியமித்து மாகாண நிர்வாகத்தை நடத்திவந்தனர். மிகவும் கஷ்டமான காலத்தில் துருக்கி பிளவு பட்டிருந்தது.

முஸ்தபா கமால் தனது தாய் நாட்டைப்பிரிப்ப தற்கு எதிராக கையாளவேண்டிய முறைகளைப்பற்றி ஆலோசித்து முடிவு செய்வதற்கு சில பிரதிநிதிகளை தெரிந்தெடுத்து அனுப்புமாறு நாடெங்கும் அழைப்புக் கடிதங்கள் அனுப்பினர். தேசத்தின் பல பாகங்களிலிருந்தும் எண்ணிலடங்காத துருக்கியர் 1919-ம் வருஷம் இலையுதிர் காலத்தில் எருஸெரம் நகரில் கூடினார்கள். இரண்டு மாதங்களுக்குப் பிறகு சிவாஸ் என்னுமிடத்தில் ஒரு புதிய காங்கிரஸை கூட்டினர் 1920ஹு அக்டோபர்மீ 1உ துருக்கி தேசீய கக்ஷியினரெல்லாம் முஸ்தபா கமாலின் தலைமையின் கீழ் ஒரு மகாநாடு கூடினார்கள். அன்டோலியாவிலுள்ள அன்வர் பாஷாவைச் சேர்ந்த தேசியகக்ஷி த்தலைவர்கள் எல்லாம் டிரான்காக்கேஷியா, மெஸபோடோமியா முதலிய பிரதேசங்களை நோக்கி கிழக்கு முகமாக சைன்யத்தைச் செலுத்திச்செல்லவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். முஸ்தபா கமால் மேற்கு முகமாயுள்ள ஸ்மர்னாவிலுள்ள கிரேக்கரைத் தாக்கவேண்டுமென்று வாதாடினர். முடிவில் மேற்கு முகமாகவே சைன்யத்தை செலுத்தவேண்டுமென்று முடிவு செய்தார்கள். இந்த மூன்று கூட்டங்களிலும் அவர்களது தேசத்தின் பாதுகாப்பிற்காக எதிர்காலத்தில் அனுஷ்டிக்கப் படவேண்டிய முறைத்திட்டத்தை தயாரித்தார்கள். முஸ்தபா கமாலை தங்களது தேசீய சபையின் தலைவராக தெரிந்தெடுத்தனர். பைைத் பாஷா இரண்டு வருஷங்களாக பாஸ்பரஸிற்கு அப்புறமுள்ள விடங்களை கைப்பற்ற முயன்றார். 1920 அக்டோபரில் நடந்த டெலிபாஷ் ராஜீய புரட்சியால்

அவர் கோணியாவை மீண்டும் தமது அதிகாரத்திற்குட்படுத்திக்கொண்டார். ஆனால் அவ்வாட்சி மூன்றுநாள் வாழ்வுடன் முடிந்தது ஏனெனில் ரா்பெரைத் பாஷா அங்கு மீண்டும் முஸ்தபா கமாலின் அரசாங்கத்தை நிலைநிறுத்திவிட்டார் பெரைத் பாஷாவின் ஏஜெண்டுகள் சென்ற கோடைகாலம் வரை கோணியாவை பிடித்துக்கொள்ள வேண்டுமென்ற நொக்கத்துடன் ஆசியாத்துருக்கியின் கடற்கரை யோரங்களில் நடமாடிவந்தனர். அடலியா என்றவிடத்தில் கமாலின் ஏஜெண்டுகள் எகிப்து அரசருக்கு சொந்தமான "பிலாட்டினு" என்ற கப்பலில் ஏறிய பொழுது அதில் தோபால் உஸ்மானும் அவனுடைய நான்கு சகாக்களும் சாமான்கள் வைக்குமிடத்தில் ஒளிந்திருப்பதைக் கண்டு அவர்களை சுட்டு கொன்றுவிட்டார்கள். ஆசியாத் துருக்கியை பிடித்துக்கொள்ள பெரைத் பாஷா செய்த முயற்சிகளுக்கு இச்சம்பவம் சாவுமணி அடித்ததுபோலிருந்து.

கான்ஸ்டாண்டி நோபிலில் சீர்கேடான மந்திரிசபை இருப்பதனால் துருக்கிக்கு ஒரு விதமான நன்மையும் ஏற்படாதென்றும் அச்சபையாரை நீக்கிவிட்டு தேசீய கட்சியாரடங்கிய மந்திரி சபையை ஏற்படுத்தவேண்டுமென்று நினைத்து முஸ்தபா கமால் அப்போது நடந்த தேர்தலில் தேசீய கட்சியாரே தேர்ந்தெடுக்கும்படி செய்தார்.

முஸ்தபா கமால் தமது தேசீய கட்சியின் தலைவர்களில் 12 பேர்களைக்கொண்டு தேசீய வாதிகளின் உடன்படிக்கையை தயாரித்து அதனைக் கான்ஸ்டாண்டி நோபி

னுள்ள பார்லிமெண்டிற்கு அனுப்பினர். அது 1920-ஹு ஜனவரிமீ 28உ துருக்கி பார்லிமெண்டால் ஏற்றுக்கொள்ளப்பட்டது உதுமானிய பார்லிமெண்ட் நிரந்தரமானதும் நியாயமானதுமான சமாதானமேற்படுமென்பதற்கு எவ்வளவு தூரம் தியாகம் செய்ய சம்மதிக்குமென்பதை அதில் கூறப்பட்டுள்ள கொள்கைகள் காட்டுகின்றதென்ன்றும் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள்.

கான்ஸ்டாண்டிநோபில் கவர்ன்மெண்டார் முஸ்தபா கமாலுடன் சம்பந்தம் வைத்திருக்கின்றனரென்றும் ஆகையால் கான்ஸ்டாண்டி நோபில் கைப்பற்றப்படுமென்றும் 1920 மார்ச்சு 13உ நேசதேசத்தார் துருக்கிய கவர்ன்மெண்டிற்கு தெரியப்படுத்தினர் 18உ துருக்கியுத்ததந்தி ஆபீஸ் கைப்பற்றப்பட்டன.

பார்லிமெண்டை கலைத்து அதிலுள்ள தேசிய கட்சியினரை கைதுசெய்து மால்டாவுக்கு அனுப்பினார்கள். ஷேகுல் இஸ்லாம்கூட மால்டாவுக்கு அனுப்பபட்டார் அவருக்குப்பதிலாக புதியதோர் ஷேகுல் இஸ்லாமை நியமித்து தேசிய கட்சியார் கலிபாவுக்கு விரோதிகளென்றும் கலிபாவின் உத்திரவிற்கிணங்காததினால் அவர்கள் காபிர்கள் (முஸ்லீம் மார்க்கத்தை விட்டு விலகினவர்கள்) என்னும் பத்வா (மதசம்மந்தமான உத்திரவு) கொடுக்கச் செய்தார்கள். முஸ்தபா கமால் இதனை அனதோலியாவிலுள்ள மௌல்விகளிடம் தெரியப்படுத்தி காபிர்கள் அல்லவென்ற ஒரு பத்வா கொடுக்கும்படி செய்தார். இதனால் பல தேசியவாதிகள் கான்ஸ்டாண்டிநோபிலிருந்து அன

தோலியாவிற்கு வந்து சேர்ந்ததால் முஸ்தபா கமால் தேசிய தலைவர்களடங்கிய ஒரு பார்லிமெண்டை அங்கோரா நகரில் ஏற்படுத்தினர். அங்கோரா தான் தேசீய சபையின் தலைநகரம். அது மலேரியா ஜுரம் வரக்கூடியதாகவும் மண்ணாலாகிய தாயுமுள்ள தொருபட்டணம் (இந்தியாவில் மண்ணாலாகிய கோட்டைபெற்று கீர்த்தியுடன் விளங்கிய பரதபூர் என்ற நகரமொன்றிருப்பதை நேயர்கள் நினைவிற்கொள்க.) அது ஆசியா துருக்கியிலுள்ளது. இதற்கும் கான்ஸ்டாண்டிநோபிளுக்கும் ரெயில் தந்தி முதலிய போக்கு வரவு சாதனங்களிருக்கின்றன அதிலுள்ள வெள்ளாடுகள் (Angora goats)பேர்போனவை எதிரிகளால் இலேசில் தாக்கமுடியாதது.

தேசிய உடன்படிக்கையை அமுலுக்கு கொண்டு வரும் நோக்கத்துடன் தேசீய சபையானது 1920-ளு எப்ரல்மீ 23உ அங்கோராவில் முதன் முதலாக கூடியது

ஆகஸ்டுமீ 14உ பாரிஸில் செவர்ஸ் உடன்படிக்கைக்கு கையொப்பமிடப்பட்டன. ஆனால் தாம் அவ்வுடன்படிக்கையை ஊர்ஜிதப்படுத்தமுடியாது என்று நினைத்து பெரைத் பாஷா தமது பதவியை ராஜினாமா செய்துவிட்டார் செவர்ஸ் உடன்படிக்கையின் முக்கிய நோக்கமென்னவென்றால் கான்ஸ்டாண்டிநோபில் ஆசியாத்துருக்கியினின்றும் பிரித்து அதன் ராணுவத்தை 700 பேர்களாகக் குறைத்து கிரேக்கரால் சூழப்பட்டிருக்கும்படி செய்வதேயாகும். ஆசியா துருக்கியை கிரேட்பிரிட்டன் பிரான்ஸ் இத்தாலி இவற்றின் ராணுவ பொறுப்பாதாரக் கட்டுப்பாட்

டின் கீழ் நிரந்தரமாக இருக்கும்படி செய்வதும் அதன் நோக்கமாகும். இதனை நிருக்கி தேசிய கட்சியார் அங்கீகரிக்கவில்லை

இவ்வுடன்படிக்கையின்படி கிரேக்கர்கள் 1919-ஷ மேமீ 14உ ஸ்மர்ணாவை வசப்படுத்திக்கொண்டார்கள்.

நேசதேசத்தார் கான்ஸ்டாண்டிநோபிலைக் கைப்பற்றினர் ஸிரியாவின் வடபாலுள்ள ஸிலிஷியாவை பிரான்ஸ் கைப்பற்றிக்கொண்டன. இஸ்தம்பூலும், ஏஷ்யா-எ-கோசக் என்ற ஸின்னாசியாக் கரையின் சிறிது பாகமும் பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டது.

முஸ்தபா கமால் அர்மீனியரோடும் பிரஞ்சுக்காரர்களுடனும் யுத்தம் செய்து கடைசியில் அவர்களுடன் தனித் தனியே உடன்படிக்கை செய்துகொண்டார். நேசதேசத்தார் லண்டன், வெனிஸ் முதலிய விடங்களில் கான்பரன்ஸ் கூட்டிப்பார்த்தார்கள். அதினால் கீழ் தேசங்களில் சமாதானமேற்படவில்லை. முஸ்தபா கமால் பாஷா ருஷ்ய போல்ஸ்விக்கர்களுடனும் பிரெஞ்சு, இத்தாலி, ஆப்கானிஸ்தானம் இவைகளுடனும் தனித்தனியே உடன்படிக்கை செய்து கொண்டார். அவர் ஆப்கானிஸ்தானத்துக்கு ஹஸன்பே, ரபத்பே ஆகிய இவ்விருவர் மூலம் அமீரான மாக்ஷிமைதங்கிய அமானுல்லாகான் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பினார். இக்கடிதத்தை பார்த்தவுடன் காபூல் அமீர் முஸ்தபா கமாலுக்கு இரண்டு லக்ஷம் ரூபாயும் அனுப்பி "இஸ்லாத்தின கொடி" என்ற பட்டமும் அளித்தார். கமால் இதை பெற்றுக்கொண்டு சில வெகுமதிகள்

அனுப்பினர் அதற்கு அமீர் அமானுல்லாகான் முஸ்தபா கமாலுக்கு கீழ்க்கண்ட கடிதத்தை எழுதினர்:—

என் அருமை முஸ்தபா கமால் பாஷாவே! அஸ்ஸலாமு அலைக்கும்! உங்கள் வெற்றிக்காகவே நாங்கள் பிரார்த்தனை செய்கிறோம். உஸன்பே, வலிபாபே, றபத்பே ஆகிய உங்கள் மூன்று பிரதிநிதிகளும் இங்கு சுகமாய் வந்து சேர்ந்தார்கள் அதற்காக நாங்கள் எங்கள் மனப்பூர்வமான வந்தனமளிக்கிறோம். உங்கள் நாட்டைக் காப்பாற்றவும் இஸ்லாத்தை மேன்மைப்படுத்தவும் நீங்கள் செய்யும் போராட்டத்தை நாங்கள் பாராட்டுகிறோம். உங்கள் மூன்று பிரதிநிதிகளும் தங்கள்வேலையை முடித்துக்கொண்டு அவ்விடம் வந்து சேருவார்கள். வரும்பொழுது என்னிடமிருந்து உங்களுக்கு ஒரு செய்திகொண்டுவருவார்கள் அந்த செய்தியிலிருந்து ஆப்கன் ஜாதியார் உங்கள் போராட்டத்தை எவ்வாறு பாராட்டுகிறார்களென்றும் துருக்கிய விஷயங்களில் அவர்களுக்கு எவ்வளவு அன்பு நிறைந்திருக்கின்றதென்றும் தெரியவரும். இன்று முதல் "இஸ்லாத்தின் சுவாதீனத்தின் பொருட்டு எவ்விதத்தியாகமும் செய்ய முஸ்லீம்கள் தயாராயிருக்கிறார்கள்" என்பதை எங்கள் சின்னமாகக் கொள்வோம். இஸ்லாத்தை மேன்மைப்படுத்தும் வேலையில் நாங்களும் முனைந்து நிற்போமென்று உறுதி கூறுகின்றேன். நம் இருதேசங்களுக்கும் இனிமேல் நெருங்கிய சம்மந்தமிருக்க வேண்டுமாகையால் மேல் நாட்டுயுத்தப் பழக்கமுள்ள துருக்கிய அனுபவ சாலிகள் சிலரை இங்கு அனுப்பும்படியாய் கேட்டுக்கொள்கின்றேன் அவ்வாறு செய்தால் ஆப்கானிய சுவாதீனத்தின் அஸ்திவாரம் பலப்படும் முடிவாக, நமது

நோக்கங்கள் வெற்றிபெறவேண்டுமென்று நாங்கள் எப்பொழுதும் நாயனைப் பிரார்த்திக்கின்றோமென்றுதெரிவிக்கிறேன்

(ஒப்பம்) அமானுல்லா.

1921-ஞ செப்டம்பர் மீ 27உ துருக்கிதேசீய சபையானது முதஸ்தபா கமால் பாஷாவுக்கு காஸி பட்டமும் முஸீர் (பீல்டு மார்ஷல்) பட்டமும் அளித்து அவருக்கு ஒரு உபசார பத்திரமும் வாசித்துக்கொடுத்தன, அச்சமயம் முஸ்தபா காமால் பாஷா பேசியதாவது:—

சகோதரர்களே? நாம் நமது தேசத்தில் வாழ விரும்புகிறோம் நமது உரிமைகளை கேட்கின்றோமேயொழிய ஐரோப்பியரிடமிருந்து எந்தவிதமான சகாயத்தையும் எதிர்பார்க்கவில்லை. சென்ற யுத்தத்தில் தலையிட்டதற்குநமக்கு அதிகமான தண்டனை கிடைத்துவிட்டது ஜெர்மனிக்கும் ஆஸ்டிரியாவுக்கும் இவ்வளவு தண்டனை கிடைக்கவில்லை. நமக்கு ஆட்சிபுரியுந்திறமை கிடையாதென்று சொல்லுகிறார்கள். நம்மைவிடத்திறமையுடனும் ஜனங்களின் மனம் நோகாதபடி ஆட்சியுரிய முடியுமென்று எந்த ஐரோப்பிய ராஜாங்கமேனும் சொல்ல முடியுமா எங்கேயாவது குறைகளில்லாத அரசாங்கம் இருக்கின்றதா. தங்களுடைய குறைகளை கவனிக்காமலும் நம்மிடம் குறைகளுண்டென்றும் அதற்காக நமது மகாணங்களை ஒவ்வொன்றாய் வசப்படுத்திக்கொள்கிறார்கள். நாம் இதர மதஸ்தர்களை அவர்களின் மதக்கட்டளைகளின்படி நடக்கும்படி செய்து வருகிறதுபோல் எந்த ஐரோப்பிய தேசமாவது செய்துவருகின்றதா சந்தேகமிருந்தால் யாராவது நமது தேசத்தின் ஒவ்வொரு கிராமங்களி

னும் சென்றுபார்த்துக்கொள்ளட்டும். கிரேக்கர்கள் தங்களது ஆயுதங்களினால் சத்தியத்தையும்நியாயத்தையும் வெல்ல நினைத்தார்கள். ஆனால் நாம் கடவுளை நம்பியிருக்கிறோம். கடவுளை நம்பினவர்கள் எப்பொழுதும் ஜெயமடைவார்கள். நமது சேனை கிரேக்கர்களை தோற்கடித்துவிட்டது இந்த வெற்றியினால் நமது வாட்களை உறையில்போட்டுவிடுவோமென்று உலகத்தார் நினைத்துவிடக்கூடாது நியாயம் கிடைக்குமவரையில் வாட்களை உறையில் போடுவது ஹராம் (கூடாது) இதனால் நாம் யுத்தத்தையே விரும்புகிறோமென்று நினைத்துவிடக்கூடாது சகல தேசங்களுடனும் சமாதானத்துடன் வாழ விரும்புகின்றோம்.

சத்தியமாக ரெத்தஞ்சிந்துவதில் நமக்கு பிரியமில்லை. சமாதானமாய் கேட்டும்பயன்படாததினால் நாம்ஆண்டவனை நம்பி நமது பரிசுத்தவாளை உருவினோம் துருக்கி ராஜாங்கத்தையும் துருக்கிய ஜாதியையும் அடிமைப் படுத்தமுடியாதென்று உலகத்தார் அறிந்துகொள்ளட்டும் நாம் சுவாதீனமாய் வாழவேண்டும் அல்லது இறந்துபோகவேண்டும் என்று முடிவுசெய்துவிட்டோம்.

தோழர்களே! 1921-ஹு ஆகஸ்டு மீ 16 உ மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் ஜெயித்தவர்களுக்கு அனுகூலம் செய்யப்படுமென்று கூறினார் இப்பொழுது நாம் கிரேக்கர்களை தோற்கடித்துவிட்டோம். ஜெயசீலர்களாகிய நமக்கு அவர் எவ்வாறு அனுகூலம் செய்து அவர் வாக்கை நிறைவேற்றுவார் என்று பார்ப்போம் ஆனால் நாம் மனிதர்களையும் வாக்குறுதிகளையும் நம்பியிருக்காமல் ஆண்டவனையும் நமது வாளையும் நம்பியிருக்கிறோம்.

4

நமது சத்துருவின் கடைசி மனிதன் நமது நாட்டி னின்று துரத்தப்படும் வரையில் நமது வாளை உறையில் போடமாட்டோம்.

கிரேக்கர்களின் அட்டூழியங்கள்.

துருக்கிய பெண்களை மானபங்கப் படுத்தினார்கள். அநேக பட்டணங்களை கொள்ளையடித்தும் தீ வைத்தும் இருக்கிறார்கள்.

ஒரு நாள் துருக்கியின் மூலகர்த்தாவான மகான் அர் தாக்ரல் என்ற புண்யவான் அடங்கியிருக்கப்பட்ட கபரின் (சமாதியின்) மேல் ஒரு கிரேக்க தளகர்த்தன் காலை வைத் துக்கொண்டு பக்கத்திலுள்ள மதரஸாவிலிருக்கும் முஸ்லீம் களை கூட்டிவைத்து கபரைப்பார்த்து "ஏ, நாயே எழுந்திரு உன்னை அவமதிக்கிறேன் இதற்கு பதில் கூறு" என்று இகழ்ந்து பேசினார் நாளாவது நாள் அதேயிடத்தில் 30000 கிரேக்கர்கள் துருக்கியரின் பீரங்கிகளுக்கு இரையானார்கள்

கிரேக்கருக்கும் கமாலியருக்கும்யுத்தம்நடந்துகொண் டிருக்கும்பொழுது மாடம் கௌலீவ்ஸ் என்ற ஐரோப் பிய மாது தான் நேரில் பார்த்ததை பின்வருமாறு கூறு கிறார்:—

கிரேக்க பீரங்கிப்படைகள் துருக்கியர்களைத் துரத் திச்சென்று அவர்களது உடைகளையும் உணவுப்பொருள் களையும் மருந்துகளையும் அபகரித்துக்கொண்டார்கள். அவ ர்களுடைய தஸ்தாவேஜுகளை தெருக்களில் எறிந்தார்கள்.

அநேக ஆலயங்களையும் மஜீதுகளையும் தோட்டங்களையும் மரங்களையும் அழித்தார்கள் துருக்கியப் பெண்களை மான பங்கப்படுத்தினார்கள் ஜெர்மனியர்களால் லாயன் என்ற நக ரம் அழிக்கப்பட்டிருப்பது போல் ஸயத் என்ற நகரம் கிரே க்கர்களால் அழிக்கப்பட்டது.

கிரேக்கர்களின் "சதியாலோசனை."

பிரான்சு கிரேட்பிரிட்டன், இத்தாலி, ஜப்பான் இவற் றின் ஹை கமிஷனர்கள் 4—8—21-ல் எழுதிய கடிதத் திற்கு அங்கோராவின் அந்நிய நாட்டு மந்திரியான யூசுப் கமால் 15—8—21ல் எழுதிய பதில் பின்வருமாறு:—

இஸ்மீத்வாசிகளுக்காகத் தாங்கள் காட்டிய சிரத்தைக் கு முதலில் வந்தன மளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அனடோலியாவிலும் திரேஸிலும் தங்கியுள்ள கிரேக்கப் படைகள் ஒரு கட்டுப்பாடாகச் செய்துவரும் அதிக்கிரமங் களைக் கிரேக்கர்மீது நீங்கள் கூறிய பலமான குறை அடங் கியிருந்தால் நான் இன்னும் அதிக நன்றியறிதலுள்ளவனாக இருந்திருப்பேன். துர் அதிர்ஷ்டவசமாக மேற்கூறிய பிர தேசங்களில் முஸ்லீம்களின் பூண்டே இல்லாமற் செய்வ தற்காக நடந்துவரும் யாதொரு குறைபாடுமின்றி நடந்து வருகின்றது. சமீபத்தில் அடின் என்ற சமபூமிப்பிரதேசத் தில் உள்ள 14 கிராமங்கள் பீரங்கிகளால் அழிக்கப்பட்டன அவற்றிலிருந்த ஜனங்கள் மசூதிகளில் தங்கியிருந்த போதி லும் அவர்கள் யந்திர பீரங்கிகளின் உதவியால் அழிக்கப் பட்டார்கள் கிரேக்கர்கள் அநியாயமாகச்செய்த பல அதிக் கிரமங்களால் துருக்கிக்கு எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கி

நமதென்பதை நாகரீகமுள்ள உலகத்தார் முன் எடுத்துக் காட்ட எங்களது கவர்ன்மெண்டார் எப்பொழுதும் தயாராக இருக்கின்றார்கள் நேசதேச ஹைகமிஷனர்கள் கையாண்ட முறையாலும் தங்கள் கண்களால் கண்ட கிரேக்க அதிக்கிரமங்களைப்பற்றி பத்திரிகைகள் வெளியிட்ட செய்திகளாலும், கிரேக்கர்கள் தங்களது கொடுமைகளைத் சிறிது குறைத்துக் கொள்ளவேண்டிய கட்டாய மேற்பட்டது இஸ்மித்தில் அதிக்கிரமஞ் செய்த குற்றவாளிகள் மீது நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதாகச்செய்த பிரமாணத்தைக் கிரேக்க கவர்ன்மெண்டார் நிறைவேற்றவில்லை. அவர்கள் இனி நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள மாட்டார்கள் போலிருக்கின்றது கிரேக்கர்கள் பொதுவாகத் திரேஸில் செய்துள்ள படுகொலைகளாலும் அட்டூழியங்களாலும் முக்கியமாக மார்மோராக் கடலைபடுத்த பிரதேசங்களில் செய்த படுகொலைகளாலும் பதினாயிரக்கணக்கான முஸ்லீம்கள் நாட்டை விட்டோடியோ அன்றி மரணமடைந்தோ போயிருக்கின்றார்கள், அவர்கள் படும் கஷ்டமே கிரேக்க அரசாங்கத்தையும் அவர்களது படையையும் அடியோடு போக்குவதற்குப் போதிய ஆதாரமாக இருக்கின்றது.

நேச தேச ஹைகமிஷனர்களாகிய தங்களுடைய கடிதத்தில் தங்களின்று மதத்திலும் ஜாதியிலும் வேறுபட்டவர்களை ஆளத் துருக்கியருக்குள்ள திறமையில் சந்தேகங் கொண்டிருப்பதாக காட்டக்கூடிய கடைசி வாக்கியத்தை நான் முதலில் கண்டிக்காமலிருக்க முடியவில்லை. துருக்கியர்கள் இவ்விஷயத்தில் மற்றவர்களும்

தங்களைத் தைர்யமாய் ஒப்பிட்டுப் பார்க்க முடியலாமெ ன்று சரித்திரமிட மளிக்கின்றது துருக்கியில் சிறு பா ன்மை யோராக இருக்கும் கிருஸ்துவர்கள் யூதர்கள் இவ ர்களுடைய சுதந்தரம் எவ்விதமான பொய் போக்குச சாக்குகளை முன்னிட்டும் எப்பொழுதும் பாதிக்கப்பட வேயில்லை. அவர்கள் சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து ரா ஜாங்கத்திற்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய சதியாலோச னைகளில் கலந்து கொள்ளாமலிருந்தால் அவர்களுடைய மத அனுஷ்டானங்களை அனுஷ்டிப்பதற்கும் அவர்களு டைய ஜாதீயக் கலைக்யானங்கள் முதலியவற்றை அபிவி ருத்தி செய்வதற்கும் அவர்கள் பெற்றுள்ள உரிமை எப் பொழுதும் பாதிக்கப்பட்டதேயில்லை. இப்பொழுது துரு க்கியிலுள்ள கிரேக்கர்கள் செல்வத்திலாவது கல்வி ஞா னத்திலாவது கிரீஸிலுள்ள கிரேக்கர்களையோ அன்றி துருக்கியிலுள்ள துருக்கியரையோ விட எவ்விதத்திலும் தாழ்வானவர்களாக இருக்கவில்லை என்ற உதாரணமாக நான் மேலே கூறியதைத் தெள்ளென நிரூபிக்கமுடியும். யூதர்கள் எப்பொழுதும் சமாதானத்துடன் கூடிய வாழ் கையை நடத்திப் பாதுகாப்பைப்பெற்று வந்திருக்கின்றார் கள் என்பதானது துருக்கியர்கள் தங்களுடைய தேசத் தைக் குலைப்பதற்குப் பாடுபடாதவர்களை எவ்வளவு அன் புடன் நடத்தி வந்திருக்கின்றார்களென்பதைக் காட்டுகின் றது. உதுமனிய ராஜ்யத்தின் சில பாகங்களை அந்நிய ருதவியால் தங்களுடையதாக்கிக் கொண்ட சில முகமதிய ரல்லாத கூட்டத்தார் தங்களுடைய அதிகாரத்திற்குட்பட் டிருக்கும் முகம்மதியர்களை எல்லாவகையாலும் துன்பப்

படுத்த ஆரம்பித்திருக்கின்றனர். துருக்கியர் காட்டிய அன்பு அவர்கள் பால் திருப்பிக்காட்டப் படவேயில்லை சிறுபான்மையோரான கிருஸ்துவர்களை ஆளுவதற்குக் கிரேக்கருக்குள்ள திறமையைப் பற்றிச் சந்தேகப்படுவது வீணென்று மேற்கூரிய விவரங்கள் நிரூபிப்பதுடன் கீழ் நாட்டில் தங்களினின்று பாஷையிலும் ஜாதியிலும் வேறுபட்ட ஜனங்களை ஆளுவதற்குத் துருக்கியர்கள் தான் இலாயக்கானவர்களென்றும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

"பான்டஸ்" சபை

கான்ஸ்டாண்டி நோபிளுள்ள கிரேக்கமத குருக்கள் வெகு நாளாக ஸாம்ஸனைத்தலை நகராகக் கொண்டதொரு கிரேக்கராஜ்ஜியத்தைக் கருங் கடற்கரையில் ஏற்படுத்துவதற்காக கிரேக்க அரசாங்கத்துடன் நெடுங்காலமாக உழைத்து வருவதாக இப்பொழுது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. பல ரகசியச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் முக்கியமான "பான்டஸ்" என்ற சபையானது 1904-ம வருஷம் ஸ்தாபிக்கப்பட்டு கிரேக்க ராஜ்ஜியத்தை ஸ்தாபிப்பதற்காகப் பெரும் பாடுபட்டு வந்திருக்கின்றது. ராணுவ ஏற்பாடுகள் நீதி ஸ்தல ஏற்பாடுகள், இவை சம்பந்தமான விதிகளும் சட்டங்களும், ஆயுதங்களும், கொடியும் இச்சங்க முத்திரையும் அதிகாரிகளால் சங்கம் பரிசோதனை போடப்பட்டபொழுது கைப்பற்றப்பட்டன. இப்பரிசோதனையின் பயன் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஹை கமிஷனருக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதன் பிறகு கிரேக்கர்கள் ஸ்மர்ணாவில் செய்த

மாதிரி கருங்கடற்கரைப் பிரதேசங்களிலுள்ள கிரேக்கரு க்கு ஆயுதம் கொடுத்து அவர்கள் கிரேக்கப்படைகள் திடீ ரென்று வந்திறங்குவதற்குஉதவி செய்யும்படி செய்வதற் காக அந்தரங்கமாக ஒருங்கு சேர்த்து பெரும்பான்மை யான துருக்கியரைச் சிறுபான்மையோரான கிரேக்கரா ட்சிக்குட்படுத்திப் பிறகு சச்சரவின்றி தேசத்தைத் தங் கள் வசம் வைத்துக்கொள் வதற்காகப் பெரும்பான்மை யோரான துருக்கியரை நிர்மூலமாக்கு வதற்காகக் கட்டுப் பாடாய் வேலை செய்ய உத்தேசித்திருந்தனர் என்பது அங்கோரா அரசாங்கத்திற்குத் தெரியும் மூட்ராவில் ஏற்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பிறகு கிரேக் கருக்குச் சாதகமாக இருக்கின்றவர்களுடைய இட்டங்கள் நன்கு தெரிய வந்தன. துருக்கியின் கஷ்டமான நிலை மையில் லாபமடையக் கருதிய 'பான்டஸ்' அரசாங்கத் தை ஸ்தாபிக்க முயன்றவர்கள். ருஷ்யாவிலிருந்தும் அனடோலியாவின் உட்புறத்திலிருந்தும், மற்றுமுள்ள விடங்களிலிருந்தும் கிரேக்கர்களைக் கருங்கடற்கரைப் பிர தேசத்திற்குக் கொண்டு வந்து அவர்களது தொகையை அதிகரித்துக் காட்டும் நோக்கத்துடன் ஒரு கமிஷனை நியமித்தனர். அதே சமயத்தில் தேசத்திற்குள் ஏராள மாக ஆயுதங்களையும் இறக்குமதிசெய்து கிரேக்கர்களு க்கு வழங்கி வெகு ஊக்கமாகப் படையாகச்சேர்த்து வந் தனர். ஸ்மர்ணாவில் செய்யப்படும் அதிக்கிரமங்களால் கோப மூட்டப்பட்ட தேசீய இயக்கத்தாலும் கிரேக்கர் கள் யுத்தத்தை முன்னிட்டுப் படைகளை ஒருங்கு திரட் டவேண்டியிருந்தாலும் கருங் கடற்கரையில் அவர்கள்

செய்ய உத்தேசித்திருந்த இஷ்டத்தை அனுஷ்டிக்க முடியவில்லை. ஆனால் அரசாங்கத்தின் கவனத்தையெல்லாம கவர்ந்திருந்த சம்பவங்களைப் பார்த்து இது தான் நல்ல சமயமென்று கருதி ஆயுதபாணிகலான கிரேக்கக் கூட்டத்தார் மூகம்மதிய ஜனங்களுக்கு வலுவில் பல கொடுமைகளை இழைத்து வந்தனர். முகம்மதியர்கள் எண்ணிக்கையில் அதிகமானவர்களெனினும் முதலில் கிரேக்கர்களுக்குக் கீழ்பட்டவர்களாகவே யிருந்தனர். அவர்கள் ஆயுதபாணிகளாகவும் ஒருவிதக் கட்டுப்பாட்டுக்குட்பட்டவர்களாகவும இல்லாதிருந்ததே அதற்குக் காரணமாகும்.

கிரேக்கரால் நேர்ந்த சேதம்.

முட்ராஸ்யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து 1—8—21 வரை சாம்ஸன் பிரதேசத்தில் மாத்திரம் கிரேக்க ஆயுதபாணிகளால் 693 துருக்கியர் கொள்ளப்பட்டனர். 59 பேர் காயப்படுத்தப்பட்டனர். 15 பேர் தூக்கிச்செல்லப்பட்டனர். 13 ஸ்திரிகள் கற்பழிக்கப்பட்டனர். முகமதியர்களுக்குச்சொந்தமான 41 கிராமங்களும் 26 பண்ணைகளும் யந்திரசாலைகளும் எரிக்கவோ அன்றி அடியோடு அழிக்கவோபட்டன. துருக்கியருடைய கால்நடைகள் கொல்லவோ அன்றி அறைக்குள் பூட்டப்பட்டு உயிருடன் எரிக்கவோ வட்டன. 111 முகமதிய கிராமங்களை அவர்கள் அடியோடு கொள்ளை யடித்ததுமல்லாமல் 914 முறை கொள்ளை களவு முதலிய சிறிய குற்றச்செயல்களையுஞ் செய்திருக்கின்றனர். அடையாளம் தெரியாதவர்களால் செய்யப்

பட்ட குற்றங்கள் அவற்றுடன் சேர்க்கப்படவில்லை. அக்கூட்டத்தார்களே அவற்றைச்செய்திருக்கலாமென்று கூறினாலும் குற்றமிராது. ஆயுதபாணிகளான கிரேக்கக் கூட்டங்கள் கிரேக்கக்கிராமங்களுக்குள் அரசாங்க உத்தியோகஸ்தர்களும் வரி வசூல் செய்பவர்களும் வரக்கூடாதெனத் தடுத்து விட்டார்கள்.

அங்கோரா கவர்ன்மெண்டார் இத்தனை நாட்கள் பொறுத்திருந்துசென்ற சில வாரங்களாகத் தக்க நடவடிக்கைகளைக்கையாண்டு வருகிறார்கள். சமாதான முறைகளாலும் யோசனைகளாலும் அவர்களை அடங்கும்படிசெய்ய முயன்றும் பயன்படாமற்போகவே கவர்ன்மெண்டார் "பான்டஸ்" சங்கத்தைச்சேர்ந்தவர்களை நீதிஸ்தலங்களின் விசாரணைக்கனுப்பி கடைசியாக கிரேக்கக் கூட்டங்களை நிராயுதபாணிகளாக்கவேண்டுமென்ற முடிவுக்கு வரவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. எவ்வளவுதூரம் பொறுத்திருக்கமுடியுமோ அவ்வளவுதூரம் துருக்கி அரசாங்கத்தார் பொறுத்திருந்தனர் என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகின்றனர். துருக்கிய ஜனங்கள் கிரேக்கர்கள் பொய்பிரசாரஞ்செய்வதற்கு இடங்கொடுக்காமலிருக்க விரும்புகின்றனர். இவ்வாறு இருப்பினும் அரசாங்கமானது தனது கடமையை நிறைவேற்றுவதற்காகவும் தேசத்தைப் பாதுகாப்பதற்காகவும் வேண்டியனவற்றைச் செய்ய வேண்டியிருப்பதால் கிரேக்கருக்கு விரோதமான முறைகளைக் கையாள வேண்டியிருந்தது.

சர்வதேச சட்ட விதிகளுக்கு விரோதமாக அனடோலியாவிலுள்ள கிரேக்கர்களை படைக்குச்சேர்த்து வந்தார்

கள். அவர்கள் கடற்கரையையடுத்த பிரதேசத்தில் கிரேக்கர்களுக்கு ஏராளமாக ஆயுதங்கொடுத்து படையாக திரட்டி வைத்து அங்கு படைகள் வந்திரங்குவதற்காக ஏற்பாடு நடந்துகொண்டிருக்கும்பொழுது இம்மாதிரி அரசாங்கத்தார் நடந்துகொள்ளாமலிருந்தால் அவர்கள் மன்னிக்க முடியாதபடி மிகவும் அசட்டையாக இருந்ததாக ஆகிவிடும் இதுவுமன்றி கடற்கரையிலிருந்த கிரேக்க ஒற்றர்கள் சில அடையாளங்களின் மூலமாக கிரேக்க யுத்தக் கப்பல்களுக்கு எல்லாவிதமான செய்திகளையும் அனுப்பி வந்தனர். இத்தியாதி காரணங்களால் கருங் கடற்கரையையடுத்த பிரதேசமானது யுத்த பிராந்திய மென்று அறிவித்துக் கீழ்க்கண்ட முறைகளைக் கையாள வேண்டிய அவசியமேற்பட்டது.

(1) கடற்கரைப் பிரதேசத்தை சேர்ந்தவர்களல்லாதவர்களாகவும் பிறநாடுகளிலிருந்து குடியேற்றக் கமிட்டியால் குடியேற்றுவிக்கப் பட்டவர்களாகவும் உள்ள கிரேக்கர்கள் தங்களுடைய குடும்பங்களுடன் தங்களுடைய பழைய இடத்திற்குப் போய்விடவேண்டும். அவர்கள் தங்களுக்குச் சொந்தமானவற்றையெல்லாம் உடன்கொண்டு செல்லலாம். (2) அப்பிரதேசத்தில் வருகின்ற கிரேக்கர்களில் யுத்த வீரர்களாக இருக்கக்கூடியவர்களில் சிலர் உள்நாட்டிற்கு தேசப்பிரஷ்ட முறையில் அனுப்பப்பட்டனர். (3) ஆயுதபாணிகளான கிரேக்கர்கள் ஒழிந்துகொண்ட கிராமங்களில் ஆயுதங்களும் தளவாடங்களும் ஒளித்து வைக்கப்பட்டிருக்கின்றனவா என்று கண்டு பிடிப்பதற்காக பரிசோதனைகள் போடப்பட்டன. (4) ஆயுதபா

ணிகளான கிரேக்கர்களுக்கு உண்மையில் உதவி செய்தவர்க ளாகவோ அன்றி ரகசிய சபைகளின் அங்கத்தினர்களாக வோ இருந்தவர்களே உள்நாட்டிற்குள் தேசப்பிரஷ்ட முறையில் அனுப்பப்பட்டனர். இவர்களுடன் தான் குழந் தைகள் அவசியத்தை முன்னிட்டுத்தான் செல்லவேண்டி யிருந்தது. இவ்வுத்தரவுகளை நிறைவேற்றும்படி உத்தர விடப்பட்டிருந்த துருப்புகளை எதிர்க்காதவிடங்களில் இர த்தம் சிந்துதலின்றி கிரேக்கர்கள் உள்நாட்டிற்குள் மாற்றப் பட்டனர். எதிர்ப்பிருந்தவிடத்தில் துருப்புகளும் பதி லுக்கு எதிர்க்கவேண்டியதால் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. மலைகளிலுள்ள கிராமங்களில் ஒளிந்துகொண்ட கிரேக்க ஆயுதபாணிகள் முற்றுகைக்குட்படுத்தப்பட்டனர். அவ் வாறு முற்றுகையிடப்பட்ட சில கிராமங்கள் அழிக்கப்பட் டன. எங்கும் படுகொலைகள் நடைபெறவில்லை. ஆனல் சிலவிடங்களில் பலமான சண்டை நடந்தது. முன் கூறிய நிபந்தனைகளின்படி யல்லாது பொதுவான முறையில் ஸ்திரீ களும் குழந்தைகளும் தேசப்பிரஷ்டஞ் செய்யப்படவில்லை. சாம்ஸன் ஜில்லாவிலுள்ள கிரேக்க கிராமங்களில் பதினயி ரத்திற் கதிகமான ஆயுதங்களும் 22 லக்ஷத்திற்கு அதிக மான தளவாடங்களும் ஜூலை மாதம் முதல் தேதி வரை பிடிபட்டன என்பதே அரசாங்கத்தார் கையாண்ட முறை கள் நியாயமானவை என்பதைக் காட்டக்கூடும்.

கிரேக்கரின் நிலைமை.

இப்பொழுது அரசாங்க உத்தரவுக்குக் கீழ்படிந்து நடக்கும் கிரேக்கர்கள் சமாதானத்துடன் வாழ்கின்றூர்கள்

மலைகளில் ஆயுதங்களுடன் சென்று ஒளிந்து கொண்டவர்களும் துரத்தப்பட்டனர். தேசப்பிரஷ்டஞ் செய்யப்படுகின்றவர்கள் கொடுமைக்கோ அன்றி அதிக்கிரமங்களுக்கோ ஆளாக வேண்டியிருக்கின்றதென்பது பொய். தேசப்பிரஷ்டஞ் செய்யப்பட்டவர்களின் பிரயாணம் ஒழுங்காக நடக்கின்றது. அவர்கள் இஷ்டப்பட்டால் தங்கள் சொந்தச் செலவில் தங்களுக்கிஷ்டமான பொருள்களுடன் செல்லும்படி அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களுடைய புதிய வீடுகளில் அவர்களுக்குப் போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. அவர்களை கொள்ளையடித்த காவலாளர்கள் ராணுவக் கோர்ட்டில் தண்டிக்கப்பட்டு திருடப்பட்ட சொத்துக்கள் சொந்தக்காரர்கள் வசம் கொடுக்கப்படுகின்றன. கிரேக்க ஆயுதபாணிகள் தேசப்பிரஷ்டஞ் செய்யப்பட்டவர்களை வேறிடத்திற்கு மாற்றுவதைத் தடுப்பதற்காக காவாக் என்றவிடத்திற்கு அருகிலுள்ள ரஸ்தாவின் பக்கத்தில் நின்று பலமுறை சுட்டிருக்கிறார்கள். அதனால் இறந்த கிரேக்கர்களைவிட துருக்கி காவலாளரின் தொகை குறைவாக இருக்கவில்லை. மேற்கூறிய முறைகளைக் கையாண்டதால் இந்த எதிர்ப்பும் நிறுத்தப்பட்டது. மெர்ஸிபானிலுள்ள ஜனங்கள் படுகொலை செய்யப்பட்டுக் கலைக்கப்பட்டனர் என்று கூறுவது சரியல்ல அந்நகரத்தார் தங்களது பழைய வேலைகளைப் பார்த்துவருகின்றனர். அந்நகரத்திற்கருகில் சண்டை செய்துகொண்டிருந்த அர்மீனிய ஆயுதபாணிகளது கூட்டங்களைப் பிடித்துக் கலைத்ததே இதற்கு ஆதாரமாக இருக்கலாம். அரசாங்கத்தின் பாதுகாப்பிற்கு ஹானிவிளைவிக்கக்கூடிய செயல்களில் கலந்து

கொள்ளாது இருக்கு மிடங்களிலுள்ள கிரேக்கர்களும் கிரு ஸ்தவர்களும் தங்கள் தங்களுடைய அலுவல்களை தங்கள் சுயேச்சைப்படி கவனித்து வருகின்றனர், பலர் அரசாங்க உத்தியோகஸ்தர்களாகவும் ராணுவ உத்தியோகஸ்தர்க ளாகவு மிருக்கின்றனர்.

இவையெல்லாம் உண்மை. இந்நிலைமையிலுள்ள எந்த அரசாங்கமும் துருக்கியரசாங்கம் நடந்துகொண்ட மாதிரி யில் தான் நடந்துகொள்ளும். அங்கோரா கவர்ன்மெண் டிற்குத் துரோகஞ் செய்கின்றவர்கள் முகமதியராயினும் சரி கிருஸ்தவராயினும் சரி எல்லோரும் ஒரே மாதிரியாக கலகக்காரர்கள் அல்லது விரோதிகள் போல் கருதப்பட்டு கடுமையாகத் தண்டிக்கப்படுகின்றனர்.

துன்பத்தை நீக்க வேண்டுமானல்?

ஆசியாமைனரிலும் திரேஸிலும் நிகழும் துர்அதிர்ஷ் டவசமான சம்பவங்களைப் போக்க வேண்டுமானல் அதற் கெல்லாம் ஆதிகாரணமாக இருக்கும் கிரேக்கப்படை யெடு ப்பை அடியோடு நிறுத்தவேண்டும். அவ்வாறு செய்யா விட்டால் அங்குள்ள துன்ப நிலைமையைச் சிறிது குறைக் கச் செய்யும் முயர்ச்சியெல்லாம் பயன்படாதொழியும் கீழ் நாட்டினரை சமாதானப்படுத்த வேண்டுமானல் 1919-ம் வருஷம் ஸ்மர்ணவில் பிரயாணஞ்செய்த நேசதேசக் கமிஷ னில் கூறப்பட்ட சிபார்சு போன்று ஸ்மர்ணவைத் துருக்கி யிடம் திருப்பிக்கொடுத்து விடவேண்டும் அதே மாதிரி திரேஸும் துருக்கிவசம் ஒப்புவிக்கப்படவேண்டும். இந்த முடிவை அடைவதற்காக துருக்கியர் தங்களால் இயன்ற

வரை பாடுபட்டு வருகின்றனர் எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரமாக இம்முடிவை துருக்கியடைகின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு உலகிற்கே க்ஷேமம்.

நிற்க கிரேக்கர்கள் திடீரென்று 25000 சைன்யங்களோடு கான்ஸ்டாண்டிநோபில் பக்கத்தில் துருக்கியரோடு யுத்தம் செய்யவந்தார்கள். கான்ஸ்டாண்டிநோபில் பொது நகரமானதினல் அதை உபயோகப்படுத்தக் கூடாதென்று நேச தேசத்தார் கிரேக்கரிடம் தெரியப் படுத்தினர்கள். கிரீஸ் தன் சைன்யங்களுடன் தென்புரம் வந்தது உடனே முஸ்தபா கமால் தங்களுடைய சைன்யங்களை தயார் படுத்தினர். அவர் படைக்கு 6000 பேர்கள் வீதம் 10 காலாட் படைகளுக்கு ஆட்களைப் தேர்ந்தெடுத்து ஒருவாரத்துக்கு முன்பே யுத்தரங்க ஓரமாக கொண்டு வந்து சேர்த்துக் கொண்டார். அப்படைகள் பகலில் இளைப்பாறியும் இரவில் யாத்திரை செய்தும் கிரேக்கருடை ஆகாய விமானங்களுக்குப் புலப்படாமல் அந்தரங்கமாய் நடத்திக்கொண்டு சென்றார். அந்தப் படைகளுக்கே எங்குபோய் தாக்க வேண்டுமென்றே தெரியாது. 25வ காலை வரையில் படைத்தலைவருக்கு எவ்வித தகவலும் கொடுக்கப்படவில்லை அங்கோராவிலுள்ள தலைமை ஆபீஸர் கிரேக்கரை தாக்க வேண்டிய ஏற்பாடுகளை வெகு அந்தரங்கமாயும் திறமையாகவும் செய்து வந்தனர்: சூர்யாஸ்தமன வேலையில் துருப்புகள் யுத்தசன்னத்தமாக நிறுத்தப்பட்டனர். 6 மைல் தூரம் வரையில் எங்கும் படைகளை நிரப்பியிருந்தனர். பீரங்கிகளும் இதர சாமான்களும் அவர்களுக்குப் பின்னல் இருந்தன. இரவு 10 மணிக்கு பாய்ந்து போர் தொடுக்கும் படைகளை முன்னணியில் கொண்டுவந்து வைக்கப்பட்டது: கிரேக்கருக்கு துருக்கிய படைகள் வந்து சேர்ந்தது தெரியாது. காலை 3 மணிக்கு ஒன்றன் மேலொன்ருக துருக்கியப் படைகள் பீரங்கியை

பிரயோகிக்க ஆரம்பித்தன. கிரேக்கரும் சும்மா இருந்து விட வில்லை. ஆனால் துருக்கியர் பிரயோகித்த பீரங்கிகளின் வேகத்தை அவர்கள் எதிர்த்து நிற்க முடியவில்லை. கிரேக்கர்களுடைய பீரங்கிகள் வைத்திருந்த இடங்களை எல்லாம் முன்னதாகவே துருக்கியர் பார்த்து வைத்துக்கொண்டிருந்ததால் முதல் 5 நிமிஷங்களுக்குள்ளயே அவைகளுக்கு இலக்குப் பார்த்து பீரங்கிகளை பிரயோகம் செய்து அவைகளை பாழ்படுத்தி விட்டார்கள். பொழுது விடிவதற்கு முன்னரே எல்லோரும் பீரங்கிகளை பிரயேகித்தனர். பெரிய குண்டுகள் கிரேக்கர்களின் மீது விழ ஆரம்பித்தன அதிகாலையில் துருக்கியர் முன்னேறினர். இங்குமங்கும் அவர்கள் தாக்கப்பட்ட துண்டு ஆனால் துருக்கியப்படைத் தலைவர் காலை 9 மணிக்குள் கிரேக்கர் இருந்த விடத்திற்குப் போய் விட்டார் மத்தியானத்திற்குள் கிரேக்க துருப்புகள் பிரிந்து ஓட ஆரம்பித்தன. வெற்றியடைந்த துருக்கியர் அவர்களை துரத்திக் கொண்டு போனார்கள் சண்டை ஆரம்பித்த 24 மணி நேரத்திற்குள் கிரேக்கத் துருப்புகள் அபியும்-காராஹிஸ்ஸாரை காலிசெய்து விட்டன. துருக்கிய துருப்புகள் "அல்லா! அல்லா!" என்று சொல்லிக்கொண்டு கிரேக்கரை எதிர்த்து முன்னேறிச் சென்று மியாண்டார், இஸ்மித் நகரங்களையும் வசப்படுத்திக் கொண்டார்கள்

முஸ்தபா கமாலே யுத்த ரங்கத்திற்கு வந்து சேனையை நடத்தினர். செப்டம்பர் மீ 2ஆ கிரேக்கதளகர்த்தரான டிரிகூபிஸூம் 500 ஆபீஸர்களும் யூஷாக் என்ற விடத்தில் பிடிக்கப் பட்டார்கள்.

சின்ன ஆசியா யுத்தத்தில் கமாலியர்களுக்கு கிரேக்கரிடமிருந்து கிடைத்த யுத்தளவாடங்களின் 1வது ஜாப்தாவின் விபரமாவது:—

பெரிய பீரங்கிகள் 358, குதிரை ஒட்டகை முதலியவைகள்

8650, துப்பாக்கி தோட்டாக்களடங்கிய பெட்டிகள் 256000, பீரங்கிகுண்டுகளடங்கிய பெட்டிகள் 40000, துப்பாக்கிகள் 160000, மிஷின் பீரங்கிகள் 1600, மற்றும் ஒருவகைத் துப்பாக்கி 1200, மோட்டார்கள் 36, சாமான் ஏற்றும் மோட்டார்கள் 1800, ராணுவ உடைகள் 120000, ராணுவ பூட்ஸ்கள் 86000, டேருக்கல் 52000, சாமான்கள் ஏற்றும் வண்டிகள் 22000, கோவேறு கழுதை வகையரு 42000, ஜெனரல் 4, கர்னல் 22, மேஜர் லெப்டினென்டு 256, ராணுவத்தலைவர், 1890, சிப்பாய்கள் 32000,

முஸ்தபா கமால் தாமே கையொப்பமிட்டு ஜெனரல் டிரிகூபியின் மனைவிக்குத் தந்தி அனுப்பினர். அதில் ஜெனரல் டிரிகூபிஸும் மற்றுமுள்ள பெரிய கிரேக்க படைத்தலைவர்களும் தம்முடைய விருந்தினர்களாக இருப்பதாகவும் அவர்கள் தேக சௌக்கியத்துடனிருப்பதாகவும் தெரியப்படுத்தினுர்கள்.

முன்னேறும் துருக்கியர் ஸ்மர்ணவை நோக்கிச்சென்றார்கள். முஸ்தபா கமால் ஸ்மர்ணவாசிகளுக்கு கீழ்க்கண்ட அறிக்கை விடுத்தார்:—

"ஸ்மர்ணவிலுள்ள முஸ்லீம்களே! கிறிஸ்தவர்களே! நாங்கள் நகரைக் கைப்பற்றப் போகிறேம். பயப்படும் துருக்கியர் மலைகளுக்கு போய் விடவேண்டும். முஸ்லீம்களும் கிறிஸ்தவர்களும் நகரில் கொள்ளையடிக்காமலிருக்க வேண்டும் முஸ்லீம்கள் பழிக்குப்பழி கிரேக்கரைக் கொலை செய்தால் சுடப்படுவார்கள். ராஜ விசுவாசிகள் சர்ந்தமாக இருக்கவேண்டும். கஷ்டப்படும் ஜனங்களை காப்பாற்ற துருக்கி சேனை வருகிறது.

செப்டம்பர் 9உ ஸ்மர்ணவை வசப்படுத்தினுர்கள். ஜெனரல் நூருதின்பாஷவை கவர்னராக்கினுர்கள். 11உ புரூஸாவும் பிடிபட்டது. 20உ சானக்கிலிருந்து சுமார் 45 மயில் தூரமுள்ள பிக்கஹா என்ற நகரைச் சமீபித்து ஜலசந்திக் கருகாமையில் வந்

தார்கள். ஜலசந்தியின் இருகரையிலும் கொஞ்சதூரம் வரையில் நேசதேசங்கள்வசம் பொதுவாக இருந்ததால் முஸ்தபா கமால் திரேஸை வசப்படுத்த ஷை பொது ஸ்தலங்களின் வழியாக செல்ல நேசதேசத்தாரிடம் அனுமதிகேட்டார். இந்தசமயம் பிரான்சும் இத்தாலியும் தனதுபடைகளை கான்ஸ்டாண்டிநோபிலிலிருந்து திருப்பியழைத்துக் கொண்டது. ஆனால் பிரிட்டிஷார் மட்டும் அவ்வாறு செய்யாமல் கமாலியரை நடுநிலைமை பிரதேசத்திற்குள் நுழையக்கூடாதென்றும் ஏகாதிபத்தியங்களை படைகள் தயார் செய்யும்படியாகவும் மிஸ்டர் லாயிட் ஜார்ஜ் கேட்டுக் கொண்டார்.

பின்னடைந்து ஓடுகின்ற கிரேக்கர்கள் ஸ்மர்னா நகரை தீவைத்தும் அனேக கட்டடங்களை இடித்துவிட்டும் கொள்ளையடித்துக் கொண்டும் சென்றார்கள் இவர்கள் ஷை நகரைப் பாழ்படுத்தியும் துருக்கியரை கொலை செய்ததையும் எழுதவேண்டுமானல் அது ஓர் பெரிய புத்தகமாக இருக்கும்.

நிற்க கிரேக்கர்கள் தங்களுக்கும் கமாலியருக்கும் சமாதானம் செய்து வைக்கும்படியாக பிரிட்டிஷாரிடம் முறையிட்டார்கள். பிரிட்டிஷாரும் யுத்த நிறுத்தஞ் செய்யும்படியாக முஸ்தபா கமாலை கேட்டுக் கொண்டார்கள். கடைசியில் முதானியாவில் ராணுவ மகாநாடு கூடி கீழ்கண்ட தீர்மானஞ் செய்தார்கள்.

1. 15 நாட்களுக்குள் திரேஸிலிருந்து கிரேக்கப் படைகள் காலிசெய்யப் படவேண்டும்.

2. 30 நாட்களுக்குள் துருக்கியாது நிர்வாகம் ஸ்தாபிக்கப்படும்.

3. துருக்கிய போலீஸ் படையின் தொகை 8000த்திற்கு அதிகப்படக்கூடாது.

4. மாரிட்ஸா நதியின் மேற்குக் கரையில் நேசதேசத் துருப்புகள் பாதுகாப்பிற்காக இருக்கவேண்டும்.

5. ஜலசந்தியிலிருந்து 10 மயிலுக்குள் ஒரு நடு நிலைமை பிரதேசமிருக்க வேண்டும். அதற்கு அப்புரம் படைகள் இருக்கக்கூடாத பிரதேச மிருக்க வேண்டும். கெப்லேயிலிருந்து ஷில்லோ வரையிலுள்ள பிரதேசத்திற்குட்பட்டுத்தான் மற்றொரு நடுநிலைமை பிரதேசமிருக்கவேண்டும். அதிலிருந்து இஸ்மித்தீபகர்ப்பத்தில் 25 மயில் வரையில் ராணுவங்கள் இருக்கக்கூடாத பிரதேசமாக இருக்கவேண்டும்.

துருக்கி சமாதான மகாநாடு லாஸேனில் கூடுவதென்று தீர்மானித்தார்கள் ஷை மகாநாட்டுக்கு பல்கேரியா, ருஷ்யா, ஜார்ஜியா முதலிய தேசப் பிரதிநிதிகளை வரவழைக்க வேண்டுமென்று ஹமீதுபே நேசதேசத்தை கேட்டுக்கொண்டார். அதற்கு சம்மதித்து எல்லா வல்லரசுகளுக்கும் அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. கான்ஸ்டாண்டி நோபிலுள்ள துருக்கி கவர்ன்மெண்டாருக்கும் அங்கோரா கவர்ன்மெண்டாருக்கும் அழைப்புக்கடிதங்கள் அனுப்பப்பட்டன.

கான்ஸ்டாண்டி நோபிலுள்ள துருக்கி கவர்ன்மெண்டாருக்கு அழைப்புக் கடிதம் அனுப்பியதை அங்கோரா தேசிய சபையார் கண்டித்து அவ்வாறு செய்தால் முடானியா ஒப்பந்தத்திற்கு விரோதமென்றும் தங்களது பிரதிநிதிகளை லாஸேனுக்கு அனுப்ப முடியாதென்றும் நேசதேசத்தாருக்கு தெரிவித்தார்கள்.

அங்கோரா தேசிய சபையார் "துருக்கிஸுல்தானுக்கு ராஜ்யாதிகாரம் கிடையாதென்று ஏகமனதுடன் தீர்மானித்தார்கள். உடனே 101 மரியாதை குண்டுகள் போடப்பட்டன. ஷை சம்

பவம் நடந்த நவம்பர் 1உ யை தேசீய விடுமுறை நாளாக கரு தப்படுகிறது.

இதைக் கேள்விப்பட்டதும் கான்ஸ்டாண்டி நோபிலுள்ள ஸுல்தானின் மந்திரிசபை ராஜிநாமா செய்துவிட்டது. அங்கோரா அரசாங்கத்தினிடமிருந்து வந்த உத்தரவுப்படி திரேஸின் கவர்னரான ரபெத்பஷா கான்ஸ்டாண்டி நோபிலின் கவர்னர் பதவியை ஏற்றுக்கொண்டார். கமாலியர்கள் தலைநகரில் அதிகாரத்தை ஏற்றுக்கொண்டது இதுதான் முதல் தடவையாகும். கான்ஸ்டாண்டி நோபிலுள்ள போலீஸ் படைத்தலைவர்களும் அவர்களது படைகளும் இனிமேல் அங்கோரா தேசிய சபைக்கே விசுவாசங் கொண்டுழைப்பதாகத் தெரிவித்து விட்டனர்.

ஸுல்தான் வஹிதுத்தீன்கான் உதுமானிய பாங்கியில் தமது பெயரால் போடப்பட்டிருந்த 70 ஆயிரம் துருக்கிப் பவுன்களை வாபஸ் வாங்கிக் கொண்டும் நகைகளை அடவுவைத்து 50 ஆயிரம் பவுன் வாங்கிக்கொண்டும், பிரிட்டிஷாரின் உதவியின் மேல் ஒரு மூடிபோட்ட மோட்டாரில் தனது அரண்மனையின் பின்புரமாகவுள்ள வழியாக திடீரென்று சென்று மலேயே என்ற கப்பலில் மால்டாவுக்கு சென்றுவிட்டார்.

கீழ்கண்ட நிபந்தனைகளை லாசேன் மகாநாட்டார் ஏற்றுக்கொள்ளும்படி பாடுபடுமாறு இஸ்மத்பாஷாவிற்கு தேசீய சபையார் உத்திரவிட்டிருந்தார்கள்.

1. தேசீய ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருக்கும்எல்லைப்புரங்கள் நிர்ணயிக்கப்படவேண்டும.

2. கிரீஸ் நஷ்டஈடு செலுத்தவேண்டும்.

3. அந்நியநாட்டுப் பிரஜைகளுக்கு துருக்கியில் விசேஷ உரிமைகளளிக்கும் முறை ரத்துச்செய்யவேண்டும்.

4. இராக்கின் (மெஸபொடோமியாவின்) எல்லைப்புரங்கள் திருத்தியமைக்கப்படவேண்டும்.

5. வரவு செலவு விஷயங்களிலும் பொருளாதார விஷயங்களிலும் ராஜீயவிஷயங்களிலும் துருக்கிக்கு பூரணசுதந்தரமளிக்கப்படவேண்டும்.

அங்கோரா உத்திரவுப்படி ரபெத்பாஷா துருக்கி ஸெனட் சபையை கலைத்துவிட்டார் நீதிபதிகளும் ராணுவ இலாகாதரும் போலீஸ் இலாகாதாரும் அங்கோரா உத்திரவுப்படி வேலை செய்து வருகின்றார்கள்.

நவம்பர் மீ 10உ லாஸேனுக்கு செல்லுவதற்காக துருக்கி பிரதிநிதிகூட்டம் கான்ஸ்டாண்டி நோபிலிலிருந்து சென்றார்கள். அதன் தலைவர் இஸ்மத்பாஷா. ஷை சபையின் முதற் பிரதிநிதி ரிஸாநூர்பே, இரண்டாவது பிரதிநிதி ஹாஸன்பே. பிரதிநிதி கூட்டத்தில் 36 பேர் இருந்தனர். அவர்களை வழியனுப்ப நேச தேச ஹைகமிஷனர்களின் பிரதிநிதிகளும் சென்றிருந்தார்கள்.

நவம்பர் 19உ அங்கோரா தேசிய சபை கலிபாவை நியமிக்க கூட்டப்பட்டது. இளவரசர் அப்துல் மஜீத்கான் அபந்தி, அப்துல் ஹமீதின் குமாரர் ஸலீம், ஆப்கன் அமீர், ஆகமூன்று பேர்களுடைய பெயர்கள் பிரேரிக்கப்பட்டது. ஓட்டுக்கு விடப்பட்டத்தில் 162 பிரதிநிதிகளில் அப்துல் மஜித்கான் அபந்திக்கு 148 ஓட்டுகளும் ஸலீமுக்கு 12 ஓட்டுகளும், ஆப்கன் அமீருக்கு 2. ஓட்டுகளும் கிடைத்தன. ஆனதால் அப்துல் மஜித்கான் அபந்தி அவர்களை கலீபாவாக நியமித்தாகள். தேசிய சபையார் செய்த முடிவை உலகிலுள்ள முஸ்லீம்கள் ஒப்புக்கொண்டார்கள்.

நவம்பர் மீ 21உ லாஸேனில் காலையில் சமாதானமகாநாடு கூடினது. 8 தேசங்களின் பிரதிநிதிகள் வந்துசேர்ந்தனர்.

ஜலசந்தி பிரஸ்னேப்பற்றி ஆலோசிக்க முதல் கமிட்டி நியமிக்கப்பட்டது அதன் தலைவர் லார்டுகர்ஸன்.

அந்நிய நாட்டினர், சிறுபான்மையோரான கிருஸ்தவர்களுடைய விஷயத்தைப்பற்றி ஆலோசிக்க இரண்டாவது கமிட்டி நியமிக்கப்பட்டது அதன் தலைவர் மார்க்குவிஸ்கரோனி.

பணவிஷயங்கள், துறைமுகம், ரெயில்வே, சுகாதாரம் முதலிய விஷயங்களைப்பற்றி ஆலோசிக்க 3 வது கமிட்டி நியமிக்கப்பட்டது அதன் தலைவர் பாரிரே (பிரஞ்சுக்காரர்) ஒவ்வொரு கமிட்டியும் சப்கமிட்டிகளையும் நிபுணர்களையும் நியமிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

நேசதேச பிரதிநிதிகள், தங்களால் இயன்ற வரையில் பேசினார்கள். கமாலியரின் பிரதிநிதியாகிய காஸி இஸ்மத்பாஷாவும் மற்றுமுள்ள துருக்கி பிரதிநிதிகளும் அங்கோரா தேசிய சபையார் கட்டளையிட்டதை வற்புறுத்தி பேசினார்கள்.

பிப்ரவரி மீ 1உ காலை லார்டு கர்ஸன் உடன்படிக்கையின் நகலை துருக்கிப் பிரதிநிதியிடம் கொடுத்தார். உடன்படிக்கையில் கையொப்ப மிடுமுன் அதிலுள்ளவற்றைப் பற்றி ஆலோசிப்பதற்காக தமக்கு ஒருவாரம் அவகாசம் வேணுமென்று இஸ்மத்பஷா கேட்டார். லார்டு கர்ஸன் 10 நிமிஷம் யோசனை செய்து 4உ வரையில் அவகாசம் கொடுத்தார்.

அங்கோரா தேசீயசபை லாசேன் நிலைமையைப் பற்றி ஆலோசனை செய்வதற்காக சின்னாசியாவில் சுற்றுப்பிரயாணம் செய்து கொண்டிருந்த முஸ்தபாகமாலை உடனே அங்கோராவிற்கு வந்து சேரும்படி தந்தி மூலம் தெரிவித்தனர்.

முஸ்தபா கமாலின் விவாகம்

முஸ்தபாகமால் அவசரமாக அங்கோராவுக்கு திரும்புகையில் வழியில்சற்று தாமதித்து ஸ்மர்னாவிலுள்ள ஓர் பெரிய மிராசு

தாராகிய மோனமெமேரோச்சிபே என்பவரின் புத்திரியும், 19 வயதுள்ள கற்றறிந்த யுவதியுமாகிய லத்தீபஹானம் என்பவரை விவாகம் செய்து கொண்டார் மணமகள் மிக்க வசீகரமான முகமண்டலத்தோடு கூடியவராகவும், நல்லகல்விகேள்விகளை யுடையவராகவுமிருக்கிறார். இவர்பிரான்ஸில் கல்வி பயின்றார். தற்காலகல்வி முறையில் பயிற்சியடைந்தவராவர். இவர்பிரான்ஸில் தேசாடனஞ் செய்து சுற்றிப்பார்த்தவர். இவ்விவாகத்தில் 130000 பவுன் ஸ்ரீ தனமாக கொடுக்கப்பட்டது. ஸ்மர்ணவிலிருந்து கிரேக்கரை வெருட்டியடித்த பிறகு கமால் இந்த யுவதியை ஸ்மர்ணவிலுள்ள அவருடைய தகப்பனர் வீட்டில் முதல் முதலாகச் சந்தித்தாராம். தேசிய சபையாரின உத்தரவுக்கிணங்கி முஸ்தபா கமால் ஸ்மர்ண விலிருந்து அங்கோராவுக்குப் புறப்பட்டு போவதற்கு முன் பெரிய கூட்டத்திலுனிடையே தன்னுடைய தாயாரின் தர்கர்வண்டை சென்று தன்னுடைய தாயின் மேல் ஆணையிட்டு கூறியதாவது.

“என்னுடைய தேசத்தார்யுத்தம் செய்யும்படி நேரிட்டால் நான் சுதந்திரம் கிடைக்கும் வரை கத்தியை கீழே வைக்கமாட்டேன். என்னுடைய தேசத்திற்கு புதிதாக கிடைக்கும் சுதந்திரங்களைப் பாதுகாப்பேன். துருக்கியின் சுதந்தாத்திற்கு கேடு வரும்படியாய் விடுவதை விட அதற்காக என் உயிரையும் விட்டு உன்னோடு சேர்ந்து விடுவேன்”

உடனே முஸ்தபா கமால் அங்கோராவிற்குச் சென்று தேசிய சபையில் கலந்து கொண்டார். முன் போலவே தங்களுடைய கோறிக்கைகளை வர்புறுத்தும்படி இஸ்மதப் பாஷாவை கேட்டுக் கொண்டார்கள். அதன்படி இஸ் மத்பாஷா லாஸேனுக்கு சென்று மறுபடியும் தனது சாமார்த்தியத்தினுல் லார்டுகர்ஸனுக்கு ஆணித்தரமான பதிலுரைத்தார். முடிவில் மோஸூல் விஷயமாக ஒரு விதமான முடிவுக்கு வராமல் ஷை சமாதானமகா நாடுகலைந்தது. இஸ்மத்பாஷா அங்கோராவிற்கு வந்து விட்டார் உடனே துருக்

கியத்துருப்புகள் யுத்தஸன்னத்தமாக்கப்பட்டது. லார்டுகர்ஸன் முதலான நேசதேச பிரதிநிதிகள் லாஸேனை விட்டு தங்களுடைய தேசங்களுக்கு சென்று விட்டனர்; முஸ்தபா கமாலும் தன்னுடைய படைத்தலைவர்களுக்கு தங்கள் தங்கள் படைகளை தயாராக வைக்கும்படி கட்டளை யிட்டார். இது சங்கதியை கேள்விபட்டதும் பிரஞ்சு தளகர்த்தரும் மந்திரிகளும் உடனே இஸ்மத்பாஷாவைகண்டு மறுபடியும் ஓர் சமாதானமா மகாநாட்டைகூட்டி ஆலோசிக்கலாமென்றும் யுத்த நடவடிக்கைகள் ஒன்றும் நடத்தக்கூடாதென்றும் கேட்டுக்கொண்டார் அதற்கு இணங்கி இஸ்மத்பாஷாவும் அவருடைய சகாக்களும் லாஸேனுக்கு சென்றார்கள். மற்றதேசங்களின் பிரதிநிதிகளும் வந்தார்கள் இஸ்மத்பாஷாவின் விடாமுயற்சியினாலும் வாக்கு சாதுரியத்தினாலும் ராஜதந்திரத்தினாலும் அங்கோராதேசீய சபையார் கட்டளையிட்ட பிரகாரம் சமாதானம் முடிவானது. சமாதான ஷரத்துகள் இன்னம் சரிவர தெரியாததினால் அதை இங்கு குறிப்பிடவில்லை. இன்ஷா அல்லா. இதன் விபரம் மூன்றும் பதிப்பில் தெரிவிக்கிறேன். ஆனால் கமாலியர் கருத்துக் கிணங்க சமாதானம் நிறைவேறினது துருக்கி பிரதிநிதிகள் சமாதான உடன்படிக்கையில் 25—7—23உ கையெழுத்திட்டார்கள். ஷை சமாதானத்தை இந்தியாவிலுள்ள தேசீய தலைவர்கள் கேள்விப்பட்டதும், நமது நபி இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது திருக்குமாரரான நபி இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாம் அவர்களை ஆண்டவனுக்காக கொர்பானி அதாவது தியாகம் செய்ததினமாகிய 25-7-23உ துருக்கி சமாதான கொண்டாட்டம் இந்தியா வெங்கும் கொண்டாடும்படி கட்டளையிட்டார்கள். அதன் பிரகாரம் இந்தியாவிலுள்ள சகல கிராமம் பட்டிணங்கள் முதலான விடங்களிலுள்ள ஹிந்து முஸ்லீம்கள் கொண்டாடினார்கள்.

நிற்க துருக்கி சமாதானம் நிறைவேற்றினதற்கு கமாலியரின் தளகர்த்தரான காஸி இஸ்மத்பாஷாவின் ராஜதந்திரத்தினாலும்

வாக்குத்திறமையினாலும் முடிவானது. அவர் ஷை மகாநாட்டுக்கு சென்றிருக்கும்போது யூதர்கள் அவருக்கு அளித்த விருந்தில் அவர் பேசின சங்கதியை இங்குகுறிப்பிடாமலிருக்க முடியவில்லை. ஷை. பிரசங்கத்திலிருந்து சுமாலியர்களின் கோரிக்கைகளும், அவர்கள் சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்றும் நன்குபுலப்படும். அவர்பேசியதாவது:—

இது காறும் நாங்கள் செய்த முயற்சிகள் எதுவும் பெரும் பலனை அளிக்கவில்லை. நாங்கள் நல்லெண்ணங்கொண்டு லாஸேன் மகாநாட்டிற்கு வந்தோம். நாங்கள் சமரஸப்பாண்மை கொண்டிருப்பதாக லாஸேனில் போதிய அளவுருஜுப்படுத்திவிட்டோம் என்று நான் கருதுகிறேன். எங்களது கோரிக்கைகள் என்றும் ஒரேமாதிரியாகத்தான் இருக்கின்றன. நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு போராடிக்கொண்டிருக்கையில் இக்கோரிக்கைகளை நிர்ணயித்தோம். மற்ற விடங்களில் எவ்வளவு சமாதானத்துடன் வாழக்கையை நடத்தக் கூடுமோ அவ்வளவு சமாதானத்துடன் துருக்கியில் தங்களது வாழ்க்கையை நடத்தலாமென்று நாங்கள் அந்நியருக்கு உறுதிமொழியளிக்கிறோம். பிறஜாதியார் தங்களுடைய நாட்டில் சுதந்தரவான்களாயும் எஜமானர்களாகவும் இருப்பது போல் நாங்களும் எங்களது நாட்டில் இருப்பதை அந்நியருடைய உரிமைக்காக தடுக்கலாமா? இக்கொள்கையை ஆதாரமாகக் கொண்டுதான் விசேஷ உரிமைகள் சம்மந்தமாக நாங்கள் கொண்டுள்ள மனப்பாண்மை யிருக்கிறது. ஜலசந்திகளில் படைகளில்லாது செய்வதற்கும் உலகிலுள்ள கப்பல்கள் அதன் வழியாகச் செல்ல அனுமதியளிப்பதற்கும் நாங்கள் சம்மதிக்கின்றோம், இந்த தியாகத்தை செய்திருப்பதால் கான்ஸ்டாண்டி நோபிலை பிறர்தாக்கும்படியாக விட்டுவிட சம்மதித்து விட்டதாகக் கருதக் கூடுமோ? எங்களுடைய ஜாதியாருக் குரியதேசங்களையே நாங்கள் கோருகின்றோம் எங்களுடைய ஜாதியாருக்கு தலைமுறை தலைமுறையாய்

சொந்தமாக இருந்து வந்த பிரதேசங்களைத் தவிர வேறு பிரதேசங்கள் எங்களுக்குத் தருவதாகக் கூறினாலும் அவை எங்களுக்குத் தேவையில்லை. உதுமானிய ஏகாதிபத்திய அரசாங்கக் கடனை உதுமானிய ஏகாதிபத்தியத்தினின்று பிரதேசங்களை பெற்றுள்ளராஜ்ஜியங்களுள் நியாயமாகப்பங்கிட்டுக் கொடுக்கவேண்டுமென்று தான் நாங்கள் விரும்புகின்றோம். நாங்கள் சுதந்தரத்துடன் வாழ்வதற்கும் மிகவும் குறைவாகவும் இன்றியமையாததாகவும்வுள்ள கோரிக்கைகளையே கோருகின்றோம். நாங்கள் எங்கள் சுதந்தரத்திறகாக போராடமுற்பட்ட பொழுதும் இப்பொழுதிருப்பதைவிட கேவலமான ஸ்திதியிலிருந்த பொழுதும் இக்கோரிக்கைகளை நாங்கள் நிர்ணயித்தோம். தற்காலத்திலும் சரி எதிர்காலத்திலும் சரி எந்த எந்த ராஜ்ஜியங்கள் ஒன்று கூடினாலும் சரி நாங்கள் முட்ராஸ், முடானியா ஒப்பந்தங்களைச் செய்து கொண்டு லாஸேனில் உடன்படிக்கை செய்ய வந்திருப்பதால் முன்புஇருந்ததைவிட அதிகபலம் வாய்ந்தவர்களாக இருக்கின்றதாக உணர்கின்றோம். எங்களது வலிமைக்கு எங்களது கட்சியில் நியாயம் இருப்பது தான் காரணம் எங்களது கோரிக்கைகள் மிதமாயும் நியாயமானதாயும் சட்டரீதியான தாயும் இருப்பதை வல்லரசுகள் உணருமென்று நாங்கள் நம்புகின்றோம். மகாநாட்டின் நடவடிக்கைகளைப் பற்றி வரும் செய்திகளால் நாங்கள் வெற்றிபெற்ற மமதையில் வலுவில் சண்டைக் கழைக்கின்றோம் என்று கருதும்படியாக ஒரு வார்த்தைகூட உபயோகிக்கவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். நாங்கள் சமரஸப்பான்மையுடன் நடந்து கொண்டபோதிலும் சமாதான மேற்படவில்லை. தங்களால் தீங்கு ஏற்படவில்லை என்பது எல்லா தேசத்தாருக்கும் மனசாக்ஷிப்பூர்வமாகத் தெரியவரும். பெருந்துன்பம் ஏற்படும்படியான நிலைமையைத்தடுப்பதற்கு போதுமான அளவு ஒரு தரத்தாரிடமும் நல்லெண்ணமில்லை. எல்லோரும் நல்லெண்ணங்கொண்டவர்களாக இருக்கவேண்டுமென்று நான் கடவுளை பிரார்த்திக்கின்றேன்;"

இதனுல் துருக்கியரின் கோரிக்கைகள் நியாயமான தென்று நன்கு புலப்படுகிறது. இந்தியாவிலுள்ள மத்திய கிலாபத்கமிட்டியின் தலைவரான சேத்சோட்டானிக்கு காஸி முஸ்தபாகமால் பாஷா பின் வருமாறு எழுதியுள்ளார்:—

சிறிதளவும் பாத்திய மில்லாமல் எங்களுடைய தேசத்தின் செழிப்பான பாகங்களைக் கைப்பற்றிக்கொண்டும், அனடோலியாவைத்தகர்த்தும் எங்களுடைய சுதந்தர போராட்டத்திற்கு விக்கின மூண்டுபண்ணிவந்தகிரேக்கத்துருப்புகளை நாங்கள் முறியடித்து வெற்றி யடைந்ததைக் கொண்டாட செப்டம்பர் மாதம் 17ந்தேதி நடந்த கூட்டத்தில் தாங்கள் செய்திருக்கும் பிரசங்கத்தை சமீபத்தில் தான் நான் பத்திரிகைகளில் படித்துப் பார்த்தேன். எங்களுக்குக் கிடைத்திருக்கும் இந்த மகத்தான வெற்றியின் விசேஷப்பலனானது துருக்கியின் எதிர்காலவாழ்வை செம்மைப்படுத்துவதுடனிராமல் தங்களுடைய வாழ்வையும் சுதந்தரத்தையும் ஒடுக்குவோர் மீது ஒடுக்கப்பட்டவர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள தைரியத்தை இது உண்டுபண்ணும்.

மன உறுதியுடனும், திடபுத்தியுடனும், விடாமுயற்சியுடனும், சுதந்தரத்திற்காகவும் உரிமைக்காகவும் போராடும் எந்த தேசத்தினரும் வெற்றி பெறாமல் எந்த தேசமும் தடுப்பது அசாத்தியமானகாரியமேயாகும். தங்களையும் தங்களது நண்பர்களையும் போன்றமகான்களுடைய தலைமையின் கீழ் இந்தியாவில் நடந்து வரும் இயக்கமானது கூடியசீக்கிரத்தில் வெற்றிபெறுமென்கிற நிச்சயமான நம்பிக்கை எங்களுக்கிருக்கிறது. உங்களுக்கு வெற்றி கிடைக்கவேண்டுமென்றும் நாங்கள் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறோம். எங்களின் வெற்றியின் கௌரவத்தில் ஒரு பாகம் ஹிந்துஸ்தானத்தைச் சேர்ந்ததாகும். தங்களுடைய நன் முயற்சியினுல் கிடைத்தபெருளுதவியும் கஷ்ட நிவாரணநிதியும் எங்களுடைய வெற்றிக்கு விசேஷ அனுகூலமாக இருந்தன என்றும் உங்களிட

மிருந்து கிடைக்கக்கூடிய ஆதரவானது நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகவும் எங்களுடைய தேசீய ஆசாபாசங்கள் சித்திபெறுவதற்கும் விசேஷ அனுகூலமாக இருக்கும். எங்களுடைய துருப்புகளின் தீரத்தினால் கிரேக்கரிடமிருந்து கைப்பற்றிய பிரதேசங்களில் வசிக்கும் லட்சக்கணக்கான ஜனங்கள் வரப்போகும் மாரிகாலத்தில் உடையும் உணவும் இருக்கையுமின்றி தவிக்கநேரும் போலிருக்கிறது. கிரேக்கர்களுடைய கோரமான அட்டூழியங்களினால் வர்ணிக்க முடியாத இந்த கஷ்ட நிலைமைக்கு ஆளாகியிருக்கும் துருக்கி முஸ்லீம்கள் ஹிந்துஸ்தானத்திலுள்ள தங்களுடைய சகோதார முஸ்லீம்களுடைய தாராள உதவியை எதிர்பார்த்திருக்கிறார்கள் துருக்கியரிடமிருந்த அனுதாபங்காட்டியும் சமயம் வாய்க்கும்போதெல்லாம் தங்கள் அன்பைக்காட்டியுமுள்ள எங்களுடைய இந்தியாசகோதரர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த மரியாதையான வந்தனத்தையும், ஆசியையும் தெரிவிக்கும்படி தங்களை நான் வேண்டிக்கொள்ளுகிறேன். என்னுடைய மனப்பூர்த்தியான நன் மதிப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

துருக்கி தேசிய சபையின் தலைவரும், சேனாதிபதியுமான,

(ஒப்பம்,)

முஸ்தபாகமால்.

கயாவில் கூடிய அகில இந்தியகிலாபத் மகாநாட்டில் முஸ்தபா கமாலுக்கு "ஸைபுல்இஸ்லாம்" முஜாஹித்கிலாபத். என்ற இரண்டு பட்டங்களை அளித்து மு. கமாலுக்கு வாழ்த்துக் கூறிய தீர்மானம்.
"ஸைபுல்இஸ்லாம்" முஜாஹித்கிலாபத் (கிலாபத்தின் ரக்ஷகர்) என்ற பட்டங்களுக் குரியவரான காஸிமுஷீர் முஸ்தபாகமால்அவர்களின் ஒப்பற்ற வெற்றிக்காக அவரை இம்மகாநாடு பாராட்டுவதோடு மேல்படி ஜெயத்தின் மகத்துவமானது இஸ்லாத்தின் கவுரவத்தின் மட்டுமின்றி ஆசியாவுக்கே ஒருகவுரவத்தை உண்டு பண்ணி

விட்டதென்று அபிப்பிராயப்படுகிறது. கமாலின் கோரிக்கைகள் பூராவாக நிறைவேறும் வரையில் மனப்பூர்வமாகவும், காரியத்திலும் இந்திய முஸ்லீம்கள் அனுதாபத்தை காட்டிவருவார்களென்று முஸ்தபாகமால் பாஷாவுக்கு இம்மகாநாடு உறுதிகூறுகின்றது.''
இத்தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேறினது.

கயாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மகாசபையில் கமாலுக்கு வாழ்த்துக் கூறிய தீர்மானம்:—முஸ்தபாகமாலும் துருக்கியரும் அடைந்த வெற்றிகளுக்காக அவர்களை காங்கிரஸ் மகாசபை பாராட்டுவதோடு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் துருக்கிய ஜாதியின் விதேசைக்கும் சுயேச்சையான அந்தஸ்துக்கும் தடங்களற்ற தேசீய வாழ்வுக்கும் இஸ்லாத்தின் திரமையான பாதுகாப்புக்கும் ஜஸீரத்துல் அரபை முஸ்லீம் அல்லாதாரின் ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதற்கும் தங்களால் இயன்றவரையில் வேலை செய்து தங்களால் ஏற்பட்ட தடைகளையும் நீக்குகிறவரையில் பிடிவாதமாக போராட்டத்தை நடத்தி செல்லுவதென்று காங்கிரஸ் மகாசபை தீர்மானிக்கிறது.

அகில இந்திய கிலாபத் கமிட்டியின் தலைவருக்கு முஸ்தபா கமால் பின்வருமாறு எழுதினார்:—

சகோதரவாஞ்சையும் இஸ்லாத்தில் பக்தியும் கொண்ட இந்தியமுஸ்லீம்களிடத்திலிருந்து துருக்கியின் உதவிக்காக வசூலித்து நெதர்லாந்து டிரேடிங்சொஸைட்டி மூலமாக அனுப்பிய தொகைகள் எங்களிடம் கிடைத்தன. நாங்கள் மிக்க நன்றி செலுத்துகின்றோம். தொன்று தொட்டு இந்திய முஸ்லீம்கள் துருக்கியோடு காட்டிவரும் அன்புக்கு இஸ்லாம் மார்க்கமே காரணமாகும் அவ்வொற்றுமையும் அன்பையும் மார்க்க விசுவாசமுள்ள இந்திய முஸ்லீம்கள் தற்காலம் அதிகரிக்கும்படி செய்துவிட்டார்கள். முஸ்லீம்கள் அனைவரும் உடன்பிறந்தசகோதரர்கள் என்ற திருக்குரான்

வாக்கியத்தை அனுஷ்டானத்தில் செய்து காட்டி இருக்கிறார்கள். அவர்கள் செய்த இப்பெரும் உபகாரத்தைக் கொண்டு ஆண்டவனுடையவும் அவனுடைய திருத்தூதராகிய நமது நபிகள் திலகம் ஹஸரத்முகம்மத் முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுடைய பரிசுத்த ஆன்மாவுடையவும் பொருத்தத்திற்கும் சந்தோஷத்திற்கும் பாத்திரர்களானார்கள்.

(ஒப்பம்) கமால்.

கிரேக்கர்கள் ஸ்மர்னாவிலும் மற்றுமுள்ள இடங்களிலும் துருக்கியர்களை துன்பப்படுத்திய எண்ணிக்கையற்ற அட்டூழியங்களைப் பற்றி ஒரு புத்தகம் தயாராகிவருகிறது. அதைவாசித்தால் கிரேக்கர்களின் அடாதசெயல்கள் தெரியவரும்,

அமெரிக்கர்களுக்கு முஸ்தபாகமாலின் வேண்டுகோள்:— நீங்கள் அமெரிக்காவிலிருந்து சுயேச்சாதிபத்தியத்தையும் கொடுங்கோன்மையையும் துரத்திவிட்டீர்கள். நீங்கள் வெகு நாள் யுத்தம் புரிந்து உங்களது சுதந்தரத்தையும் சுயேச்சையும் ஸ்தாபித்துக் கொண்டீர்கள். நீங்கள் உலகில் ஜனநாயக முறையை ஆதாரமாகக் கொண்டு நாகரீகமானதும் பலமானதுமான ஜனநாயக அரசாங்கத்தை ஸ்தாபித்துக் கொண்டிருக்கின்றீர்கள். உங்களைப்போலவே சுதந்தரத்தையும் சுயேச்சையையும் ஜனநாயகத்தையும் போராடி ரெத்தம் சிந்திவரும் மற்றொருஜாதியினர் உலகில் இருக்கின்றனர். பரிசுத்தமானதாயும் இந்த லட்சியங்களின் அபிவிர்த்திசெய்வதற்காகவும் உள்ள முயற்சிகள் உங்களுக்கு தென்படா வண்ணம் சிலர்முயன்று வருகின்றனர், இம்மாதிரி பிரசாரஞ்செய்கின்றவர்கள் விஷயங்களை அறியாத பிடிவாதக்காரர்களாக இருப்பார் அன்றி எங்களுக்கு புதிதாககிடைத்த சுதந்தரங்களை அழிக்கவும் பாதிக்கவும் நேராகவோ அன்றி அந்தரங்கமாகவோ முயன்று வருகின்றவர்களுடைய பிரதிநிதிகளாக இருப்பார்கள். பித்தலாட்டஞ் செய்கின்ற இவர்களை நம்பாதீர்கள். துருக்கியர் சுதந்தரத்திற்காக

வும் சுயேச்சைக்காகவும் போராடிவருகின்றனர். அவர்கள் உங்களைப்போலவே உலகின் நீதியான வளர்ச்சிக்கும் உலகமுன்னேற்றத்துக்கும் உதவியாக இருக்கும்படி விரும்பி உண்மையில் முயற்சி செய்து வருகின்றூர்கள். அவர்களைப்பற்றிமுன்னதாகவே அபிப்பிராயங்கொள்ளக் கூடாது.

முஸ்தபா கமால் பாஷா அங்கோரா வாசிகளால் கொடுக்கப்பட்டதொரு சிறிய பங்களாவில் வசித்து வருகின்றூர். அது நகருக்கு வெளியேயுள்ள மலையின்மேலிருக்கின்றன. அதில் பழைய நாற்காலிகளும் புறை நக்ஷத்திரங்களால் அலங்கரிக்கப்பட்ட துணியை விரிப்பாகக்கொண்டதொரு மேஜையும் இருக்கின்றன. அதில் ஒரு சிறிய புஸ்தகசாலையுமிருக்கின்றது.

காஸி முஸ்தபா கமால் பாஷா தமது தேசத்தின் தலைவராக மாத்திரம் இருக்கவில்லை உலகிலுள்ள ஸுன்னிஎன்ற வகுப்பைச்சேர்ந்த முகம்மதியர்களுக்கெல்லாம் தலைவராகிவிட்டார். அவர் எவரும் கலங்கக்கூடிய நிலைமையிலும் சிறிதும் கலக்கமடையாமல் எஃகு போல் உருதியா யிருக்கக்கூடிய மனத்தினர். உலகில் உறுதியும் தீரமும் நிதானமும் உடைய சிரேஷ்டமான தலைவர்களுள் அவரும் ஒருவர்.

அவர் நடுத்தரமான உயரமுள்ளவர். அவருடைய கூர்மையான நீலநிறக் கண்களும் பொன்னிற மயிரும் நறுக்கு மீசையும் கண்டோர் மனதைக் கவருகின்றன. அவர் வஜ்ஜிர சரீரி. சிநேகத்திற்கு தகுதியானவர். தம்மிடம் அணுகுவோரிடம் சிநேகபாவமாக நடந்துகொள்ளுகிறூர். வீண் ஆடம்பரத்தில் அவர் பிரியப்படுவதில்லை. சாமான்ய

மான வாழ்வை அவர் விரும்புகிறார். அவருக்கு வருஷம் ஒன்றுக்கு 40 பவுன் தேசிய சபையார் கொடுக்கிறார்கள் இப்பொழுது அவருக்கு வயது 43.

கான்ஸ்டாண்டி நோபிலில் பிரசுரமாகும் வாஹித் என்ற பிரபல தினசரி பத்திரிகையின் ஆசிரியர் அமீந் அமீன் முஸ்தபா கமால் பாஷாவை அங்கோரவில் கண்டு பேசியபொழுது அவருடைய கேள்விகளுக்கு முஸ்தபா கமால் பாஷா பின் வருமாறு பதில் கூறினார்:—

நாங்கள் உலகிலேயே மிக்க ஜன நாயக முறைவாய்ந்த அரசாங்கம் இந்நாட்டில்தான் ஏற்பட்டிருக்கின்றன தென்பதற்கு அங்கோராவிற்கு சமீபத்தில் வந்துபோன. அந்நிய நாட்டினர் சொல்லியுல்லவற்றை அத்தாக்ஷியாக எடுத்துக்காட்ட முடியும். இங்கு சர்வாதிகாரியாவது, ஜனாதிபதியாவது அன்றி அரசராவது கிடையாது. எல்லா அதிகாரமும் தேசியவாதிகளின் சபையாரிடந்தான் இருக்கிறது. அச்சபைக்கு ஜனங்கள் தங்கள் இஷ்டப்படி பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கின்றார்கள். மாகாணங்கள் அந்த விடங்களிலுல்ல கமிட்டிகளாலும் அவற்றின் பிரதிநிதிகளாலும் அரசாளப்படுகின்றன. நாங்கள் பழைய அரசாங்க முறையிலிருந்தபடி மத்திய அரசாங்கத்திற்கே அதிக அதிகாரம் இருக்கும் வழக்கத்தைப் போக்கிவிட்டோம். அந்தந்த ஊரின் விஷயங்களனைத்தையும் அந்தந்த ஊரார்களே கவனிக்குமாறு விட்டுவிட்டோம் அவர்களே நாட்டை உண்மையில் அரசாளுகின்றார்கள்: எங்களது அரசாங்கம் ஆரம்பித்துக் கொஞ்ச

காலமே ஆகிறது ஆயினும் ஜனநாயக உணர்ச்சியுடன் நாங்கள் உழைக்கின்றோ மென்பதற்கு எங்களது தேசிய சபையின் வேலைகளே முக்ய ஆதாரங்களாக விருக்கின்றன.

எங்களுடைய தேசத்தின் புனருத்தாரானத்துக்காக அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டிய பலயோசனை களிருக்கின்றன. நாங்கள் துருக்கியின் ஒவ்வொரு மூலை யிலுள்ள ஜனநாயக ஆட்சியின் உரிமைகளை அளிக்க விரும்புகிறோம். இதற்காக கல்வி முறைகளைப் புணருத் தாரணஞ்செய்ய விரும்புகின்றோம. அதற்கென பெருந் திட்டம் தயாரித்திருக்கின்றோம். தேசமானது பொரு ளாதார விஷயங்களில் உத்தாரனமடைவதற்காகச் சில வழிகளைத் தயாரித்திருக்கின்றோம். சுருங்கக்கூறில் தற் கால முறைப்படி புதியதொரு துருக்கியை ஸ்தாபிக்க முயலுகின்றோம் எங்களது நோக்கங்கள் சித்தியாவதற்கு முக்கியமாக சமாதான மேற்படவேண்டும். அச்சமாதா னமானது கௌரவம் வாய்ந்ததாகவும் நெடுநாள் நிற் கக் கூடியதாகவும் இருக்கவேண்டும். சமாதானத்திற்கு வருவதற்காக நாங்கள் மிகக்குறைந்த பக்ஷமாகக் கூறும் நிபந்தனைகள் என்ன வென்பதை தேசிய வாதிகளின் ஒப் பந்தம் காட்டும். அதன் சுருக்கம் பின் வருமாறு:—

(1) அராபியர்கள் பெரும்பான்மையோராக இருக் கும் பாகங்கள் எங்களது ராஜ்ஜியத்தைச் சேர்ந்தவை என்று கோருவதற்குள்ள உரிமைகளை விட்டுவிடுகின் றோம். ஆனால் இதர பாகங்கள் ராஜ்ய சம்பந்தமாகவும் ஜாதிய சம்பந்தமாகவும் ஒன்றுபட்டுள்ள ஓரே ராஜ்ஜிய

மெனக்கருதுகின்றோம். (2) மேற்குத்திரேஸ் எந்த விதமான அரசியலுடனிருக்கவேண்டுமென்பதை அங்கு வசிக்கும் ஜனங்களே நிர்ணயித்துக் கொள்ளுமாறு விட்டுவிடுகின்றோம். ஆனால் கிழக்குத்திரேஸ் சம்பந்தமாக எவ்விதமத்தியஸ்த்தையும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் (3) புதிதாக சிருஷ்டிக்கப்பட்ட ராஜியங்களில் உள்ள சிறுபான்மையோர்சம்பந்தமாக நேசவல்லரசுகள் தீர்மானிக்கிறபடி அவர்களது உரிமைகளை ஏற்று, ஆதரிக்கின்றோம். (4) கான்ஸ்டாண்டிநோபிளும் திரேஸும் யாதொரு நிபந்தனையுமின்றி திருப்பிக் கொடுக்கப்படவேண்டும். ஆனால் வியாபாரத்திற்காகவும் போக்குவரவு சாதனத்திற்காகவும் டார்டனல்ஸ் ஜலசந்தியை உபயோகிக்கும் சுதந்தரங்களை விரும்பும் தேசங்களின் உரிமைகளை மதித்து நடப்போம். (5) ராஜிய விஷயங்களிலும் நீதிபரிபாலனவிஷயங்களிலும் கிடையாதென மறுக்கமுடியாது. துருக்கியர்கள் பெரும்பான்மையோராக இருக்கும் சுதந்தரமுள்ள தேசமெனத் துருக்கி அங்கீகரிக்கப்படவேண்டுமென நாங்கள் வற்புறுத்துகின்றோம்.

இதனால் நாங்கள் ஏகாதிபத்திய ஆசையை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை என்பது தெரியும். துருக்கியர் பெரும்பான்மையோராக இல்லாத பாகங்களில் அரசுசெலுத்த எங்களுக்குரிமையுண்டென நாங்கள் கூறவில்லை எங்களை எங்களது தேசத்திலேயே அடிமைகளாக செய்யவிரும்பும் விரோதிகளால் நாங்கள் சண்டை செய்ய வேண்டிய நிர்பந்த மேற்படுகின்றது. நாங்கள் எங்களது தேசத்திலேயே சுதந்தரத்துடன் வாழ விரு

ம்புகின்றோம். இந்த சிறந்த உரிமை எல்லா தேசத்தாருக்கும் உரியதே இதை ஒரு தேசத்தார் மற்றொரு தேசத்தாருக்குக் கிடையாதென மறுக்கமுடியாது துருக்கியர் பெரும்பான்மையோராக இருக்குமிடத்தில் நாங்கள் சுதந்தரர்களாக இருக்கப்பெற்றுள்ள உரிமையை எங்களது விரோதிகள் உணர்ந்துவிட்டால் நாங்கள் எங்களது ஆயுதங்களை எறிந்து விட்டுப்புனருத்தாரணத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவதில் கவனத்தைச் செலுத்த ஆரம்பிப்போம்.

டெயிலி மெயில் நிருபர் மிஸ்டர் வார்டு பிரைஸ் முஸ்தபா கமாலை கண்டுபேசியபொழுது அவர் பின்வருமாறு கூறினார்:—

நாங்கள் இதற்கு அதிகமாகச் சண்டைசெய்யக்கூடிய விஷயங்களொன்றும் இல்லை. நான் சமாதான மேற்படவேண்டு மென்று மிக்க ஆவலுடன் விரும்புகின்றேன். நான் இந்தச் சண்டையை நடத்தவே விருப்பங்கொள்ளவில்லை. ஆனால் ஆசியத் துருக்கியை விட்டுச் செல்லும்படி கிரேக்கர்களைத் தூண்டுவதற்கு வேறு வழி யெதுவுமிருப்பதாக எனக்குத் தோற்றவில்லை. நாங்கள் கோரும் எல்லைப் புறத்திற்குள் சிரியாவும் மெசபொடோமியாவுஞ் சேர்ந்திருக்கவில்லை. ஆசியாத் துருக்கியையும் கான்ஸ்டாண்டிநோபிலையும் மாரிட்ஸா நதி வரையிலுள்ள திரேஸையும் கேட்கின்றோம். நாங்கள் கேட்கும் பிரதேசங்களிலும் பெரும்பாலும் துருக்கியரே இருக்கின்றனர். டார்டனல்ஸுக்குள் சுதந்தரமாகச் செல்ல உரிமை

அளிக்கவேண்டு மென்பதை நாங்கள் ஒத்துக்கொள்ளு கின்றோம். டார்டனல்ஸில் நாங்கள் சானுவங்களை வை த்துக்காக்க விரும்பவில்லை. ஆனால் கான்ஸ்டாண்டிநோ பிலேக் பாதுகாப்பிற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும் உரிமை இருப்பதாகத் தெரிவித்துக் கொள்ளுகின் றோம். நேசதேசத்தினர் கான்ஸ்டாண்டிநோபிலே கொடு க்க மறுத்தால் நான் இந்நகரின்மீது படையெடுத்துச் செ ல்ல வேண்டிய கட்டாய மேற்படும் நாங்கள் சில நாட்க ளில் அதைப்பிடித்து விடமுடியும். ராஜிப் பேச்சால் அதனை அடைவதே சிறந்ததென நான் கருதுகின்றேன். ஆனால் அதற்காக நெடுநாள் காத்திருக்க முடியாதென் பது இயற்கையேயாகும். அந்நியர்களுக்கு இருக்கும் விஷே உரிமைகள் ரத்து செய்யப்படவேண்டும். கிரே க்க கப்பற் படை எங்களிடம் ஒப்பிவிக்கப்படவேண் டும். கிரேக்கர்கள் பின்வாங்கிச் சென்றபொழுது விளை வித்த சேதத்திற்கு நஷ்ட ஈடு செலுத்த வேண்டும் எந்த விடத்தில் கூட்டப்பட்டாலும் அதில் கலந்து கொள்ளத் தயாராயிருக்கின்றோம் ஆனால் துருக்கியின் எல்லைக்குள் ஓரிடத்தில் மகாநாடு கூடப்படாவிட்டால் நானே மகா நாட்டிற்கு வரமுடியாது ஏனெனில் தேசீய சபையார் எனக்கு அனுமதியளிக்க மாட்டார்கள் கலீபா எப்பொ ழுதும் கான்ஸ்டாண்டிநோபிலேயே இருக்கவேண்டும் தற் காலமுள்ள ஸுல்தான் தங்களுடைய விரோதிகளுடன் கூடி சதியாலோசனை செய்தபடியால் தேசீய சபையார் அவருக்குப்பதிலாக மற்றொருவரைக் கலீபாவாக நியமிக்கக்கூடும். நாங்கள்

வெற்றியடைந்ததும் சும்மாவிருக்கின்றோம், கிரேக்கர்கள் தோல்வியடைந்தும் சொத்துக்களை அழித்துச் செல்லுகின்றனர்

சிக்காகோ டிரைபூன் பத்திரிகையின் நிருபா ஒரு நாள் முஸ்தபாகமால் பாஷாவை பார்க்கப் போய் அவருடைய பெயரடங்கிய சீட்டை கமாலின் மெய்காவலரிடம் கொடுத்தார். "மேன்மை தங்கிய பிரபு சிறிது வேலையாக இருக்கிறார் அது முடிந்ததும் தங்களுக்கு பேட்டி கொடுப்பார் என்று அவர் பதில் சொல்லிவிட்டு அவர் வந்திருப்பதை தலைவரிடம் தெரியப்படுத்தச் சென்றார். அங்கிருந்து திரும்பி வந்து சிறிது நேரம் அவருடன் பேசிக்கொண்டிருந்தார். அதற்குள்ளாக முஸ்தபா கமால் பாஷா அங்கு வந்துவிட்டார். அவர் அந்நிருபரிடம் பின்வருமாறு கூறுகிறார்:—

வெற்றி கிடைத்துவிட்டதற்காக எங்களுடைய ஆசைகளை பெருக்கிக்கொள்ளப் போவதில்லை. நாங்கள் ஏற்கனவே கேட்டதை விடக்கூடுதலாவது குறைவாகவாவது ஒன்றும் கோரப்போவதில்லை எங்களுடைய ஒப்பந்தத்தை மீறி நடக்கப்போவதில்லை. எங்களுடைய கோரிக்கைகளைப் பற்றி சந்தேகமெழ இடமேயில்லை எங்களுடைய உடம்பாடு ஒரு பக்கத்திற்குள்ளடங்கியது. துருக்கியருடைய தாய் நாடுகளில் எங்களுக்குப் பூரண சுதந்தரம் வேண்டுமென்றே நாங்கள் கோருகிறோம். கான்ஸ்டாண்டிநோபிலும் அட்ரியாநோபிலும் திரேஸில் முஸ்லீம்கள் அதிகமாயுள்ள பாகம் எங்களுக்கு கிடைக்க வேண்டும். எங்களுடைய நாட்டிலுள்ள அன்னிய நாட்டினர் ஏதேனும் குற்றம் செய்தால் அவர்களை நாங்கள் விசாரிக்காமல் அந்தத் தேசப்

பிரதிநிதிகளிடம் அவர்கள்மீது நாங்கள் பிரியாது செய்து கொள்ள வேண்டுமென்பது கூடாது. ஸ்மர்னாவில் நடந்ததைப் போல் நாங்கள் எவ்விதக் கொலையும் செய்யவில்லையென்பதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். ஆனால் அகஸ்மாத்தாக நேர்ந்துள்ள சம்பவங்களை நாங்கள் தடுப்பதற்கில்லை. தங்களுடைய உற்றாரையும் உறவினரையும் நாசப்படுத்திய பிரதேசங்கள் வழியாக வந்த துருப்புகளை ஹத்துக்குட் படுத்துவது கஷ்டமான காரியம். ஆயினும் நாங்கள் ஹத்துமீறி விடாமல் பார்த்துக் கொள்வோம். இன்று முதல் அமைதி ஏற்பட்டு விட்டதென்று நீங்கள் திட்டமாக அறிவிக்கலாம். பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்கிற எண்ணம் எங்களுக்குக் கிடையவே கிடையாது. பழங் கணக்குகளை தீர்ப்பதற்காக நாங்கள் இங்கு வரவில்லை பழைய கதைகளை நாங்கள் மறந்துவிட்டோம்.

அந்நிருபர் தெரிவிப்பதாவது:—

துருக்கியர்கள் இந்த பட்டணத்திற்குள் பிரவேசித்த கால முதல் நான் தினந்தோறும் இரவும் பகலும் தெருக்களைச் சுற்றி வருகிறேன் ஒருவரும் கொலை செய்யப்படவில்லையென்று நான் நிச்சயமாக கூறுவேன் நான்கு தினங்களுக்குள் நகரில் அமைதி நிலவி கடைகள் திறக்கப்பட்டுவிட்டன. துறைமுகத்திலுள்ள இரண்டு அமெரிக்கக் கப்பல்கள் சாமான்களை ஏற்றிக்கொண்டும் இறக்கிக்கொண்டும் இருக்கின்றன. ஸ்மர்னாவில் சமாதான வாழ்வு ஏற்பட்டுவிட்டது.

ஜெனரல் டௌன்ஷெண்டு முஸ்தபா கமாலை கண்டு பேசிய விபரம் பின்வருமாறு கூறுகிருர்:—

கோஹ்ரியா என்ற இடத்தில் ஒரு மாதத்திற்கு முன் கமால் பாஷாவை கண்டேன். துருக்கியச்சேனை முன்னே ருப்படி செய்யும் சக்தி அவரிடந்தான் இருக்கிறதென்பது எல்லோருக்கும் தெரியும். சேனையிலுள்ளவர்களும் சாதாரண ஜனங்களும் அவரைக் கொண்டாடுகிருர்கள். கமால் கட்சியில் பிளவுகள் ஏற்பட்டிருப்பதாக துருக்கிக்கு விரோதமாக பிரசாரம் செய்கிறவர்கள் சொல்லுவது வீண் வார்த்தை கான்ஸ்டாண்டி நோபில் நகரில் 100 க்கு 90 ஜனங்கள் அவரை ஆதரிக்கிருர்கள். அனடோலியாவிலுள்ள துருக்கியர் எல்லோரும் அவரை ஆதரிக்கிருர்கள். மூச்சு பேச்சன்னியில் அவருடைய உத்தரவுகளுக்கு ஜனங்கள் கீழ்படிகிருர்கள். தேசிய கவான்மெண்டு வெகு நன்ருக வேலைசெய்து வருகிறது அவர் சொல்லுவதுதான் சட்டம்.

கமால் பாஷா அதிகமாகப்பேசுகிறதில்லை. ஏதேனும் ஒரு விஷயத்தில் அவருக்கு சிரத்தையிருந்தால் அதைப் பற்றி வாசாமகோசரமாகப் பேசுவார். ஒரு நாள் இரவு நானும் அவரும் சேர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் 1805-ம் வருஷத்தில் ஆஸ்டர் லிட்ஸ் என்ற இடத்தில் நெப்போலியன் செய்த சண்டையைப்பற்றி கமால் பேசத் தலைப்பட்டார். நெப்போலியன் செய்த சண்டைகளில் இவ்வற்றில் தான் அவர் சத்துருவின் இருதயஸ்தானத்தை

தாக்கினர். அப்படிப்பட்ட சண்டை ஒன்று சத்துருவின் சேனையை எதிரில் நின்று மறித்துக்கொண்டு பக்கவாட்டில் தாக்குவதே நெப்போலியனுடைய வழக்கம். அவ்விஷயமாக நாங்கள் இருவரும் பேசினதன் மேல் நூறு வருஷங்களுக்கு முன் நெப்போலியனுடைய யுத்த தந்திரம் நல்ல பலன் தந்தது போல் இப்பொழுதும் தரக்கூடியதுதானென்ற முடிவுக்கு வந்தோம். யுத்த தந்திரங்களை வெகு ஆழ்ந்து அவர் படித்திருக்கிறார் என்பது நிரூபவிக்கவே இதை இங்கு குறிப்பிடுகிறேன். காலிபோலியில் தான் அவர் நல்ல ஊழியஞ் செய்தார். அதைமதித்துத் தான் அவர் நளகர்த்தராக்கப்பட்டார். பிறகு பாலஸ்தீன் போர்முகத்தில் துருக்கியர் தள்ளாடிக்கொண்டிருந்தபொழுது அங்கு ஊழியம் செய்தார். 1918-ம் வருஷத்தில் யுத்த நிறுத்த உடன்படிக்கை நடந்த பிறகு ஆசியா மைனரில் அவர் துருக்கி சைன்யத்தின் பரிசோதகராகஇருந்தார் கான்ஸ்டான்டிநோபில் நகரை நேசதேசங்கள் வசப்படுத்திக்கொண்டுவிடவே அவருடைய தேசாபிமானம் பொங்க ஆரம்பித்து விட்டது. தேசியக்கட்சியினர் அதன் மேல் தான் சண்டைக்கு கிளம்பினர் கமால் பெரிய தேசபக்தர் துருக்கி துருக்கியருடையதாக விருக்கவேண்டுமென்பது அவருடைய லட்சியம் சமாதானத்தில் அவருக்கு மிகுந்த ஆசையுண்டு ஆனால் அந்த சமாதானமானது கண்ணியத்தைப் பறிகொடுத்து விடக்கூடாது. ஆசியத் துருக்கியை கிரேக்கர்கள் உடனே காலி செய்து விடவேண்டுமென்று அவர் சொல்லுகிறார்.

(ஒப்பம்) டௌன்ஷெண்டு

அங்கீகாராதேசிய சபையின் முதல் வருடோற்சவத்தின் பொழுது அதன் தலைவரான காஸிமுஸ்தபாகமால் பாஷா செய்த பிரசங்கம் பின்வருமாறு:—

கனவான்களே! முன்பு நான் சொல்லியதின் தொடர்சியாக கனந்தங்கிய இச்சபையார் சென்ற வருஷத்தில் செய்த வேலையைப் பற்றி உங்களுக்கு எடுத்துக் கூறுகிறேன் உங்கள் சபை கூடிய தேதியான 1920-ம் ஹு எப்ரல் மீ 23உ முதல் நேற்றுவரை 311 நாட்கள் கடந்துவிட்டன இக்காலத்திற்குள் 159 கூட்டங்களை உங்கள் சபையானது கூட்டி 51 தடவை அந்தரங்கமாயும் 357 தடவை பஹிரங்கமாயும் ஆக 408 விஷய ஆலோசனை நடந்திருக்கிறது. அக்கூட்டங்கள் 104 சட்டங்களை ஏற்றுக்கொண்டும் 149 பிரேரணைகளைத் தள்ளப்பட்டுமிருக்கிறது. நிர்வாக சபைக்கு 67மசோதாக்களை அனுப்பியும் 6மசோதாக்களின் விவாதத்தைஒத்தி போட்டுமிருக்கிறோம். அம்மசோதாக்களை வரும் வருஷத்தில் எடுத்துக்கொள்ளுவோம் மேன்மை தங்கிய உங்கள் சபையானது ஏற்றுக்கொண்ட சட்டங்களில் (1) தேசத்திற்கு விரோதமாய்ச்செய்யும் குற்றசம்பந்தமான சட்டமும் (2) மதுபானத்தை தடுக்கும் சட்டமும் (3) கிராமத்தார்களது நன்மைக்காகச் செய்யப்பட்ட காட்டிலாக்காச்சட்டமும் (4) ஸிபிலீஸ் என்னும் தொத்துவியாதி பரவிவிடாமல் தடுக்க ஏற்பாடு செய்யப்பட்ட நமது ஜனங்களின் சுகஜீவியத்திற்கனுகூலமான சட்டமும் ஆகியவைகளே முக்கியமானது உங்களில் அநேகர் சேனாதிபதிகளாக

வும் சாதாரண சிப்பாய்களாகச்சேர்ந்து யுத்தாங்கத்துக்கு சென்று நமது சத்துருக்களுடன் போர்புரிந்தும் நீதிபதிகளாகவும்ராணுவ உத்தியோகஸ்தர்களாகவும் தேசிய சபையின் கட்டளைக்கிணங்கி கெவர்ன்மெண்டின் அலுவல்களை தடைப்படாமல் நிறைவேற்றினீர்கள் நிர்வாக வேலைபார்த்தவர்களும் நம்முடன் ஊழியம் புரிந்த தோழர்களும் அவர்கள் தங்கள் கடமையைப் பூர்ணமாய்ச் செய்து முடித்ததற்காக நாம் நமது மனமார்ந்த வந்தனமளிக்கிறோம் இதைப் போலவே வரும் வருஷத்திலும் உங்கள் சபை வேலை பார்க்கும். இன்ஷா அல்லா முடிவாக நாம் வெற்றியடைவோம் அதன் மூற்குறிகள் இப்பொழுதே தோன்று கின்றன (நாயன் அதை கொடுப்பானாக என்ற கூக்குறல்) நமக்கெல்லாம் பூர்ணஜெயங் கொடுக்கும்படி ஆண்டவனைத் தொழுவதோடு பரிசுத்தமும் மேலானதுமான இப்போராட்டத்தில் உயிர் வாழ்கை சுவாதீனம் இவைகளின் உரிமைக்காக கௌரவமாக யுத்தஞ்செய்து யுத்தாங்கத்தில் மடிந்த சகோதார்களின் பரிசுத்த ஆன்மாவுக்காகவும் நான் பிரார்த்தனை செய்கிறேன். நமது தேசத்தாருக்கு சில மேலான சக்திகள் உண்டு அந்த சக்த்தியின் வளர்ச்சியும் முடிவின் பிரகாசமான தோற்றமும் ஒன்று சேர்ந்து ஆச்சரியப் படக்கூடிய பலனைத்தரும்.

தோழர்களே!! இன்று வரையும் நாம் நடந்த தூரத்தை மறுபடியும் நினைத்துப்பார்ப்போம். நமது ஜாதிய மாரணம் சம்பவித்ததுபோலத்தோன்றிய யுத்த நிறுத்த உடன் படிக்கை நாள் முதல் இன்றுவரையும் எண்ணிலடங்காத கஷ்டநஷ்டங்கள் சம்பவித்திருக்கின்றன பூர்வீககாலமுதல்

கீர்த்தியுடனும் சுவாதீனத்துடனும் வாழ்ந்துவந்த நம் ஜாதியானது சின்னபின்னப்பட்டு விடுமென்று தோன்றிற்று ஆனல் நம் மூதாதைகளின் குறல் நம் ஹிருதயங்களில் புகுந்து அடிமைத்தனத்தின் விரோதமாயும்சுவாதீனத்தின் பொருட்டும் யுத்தத்திற்குப்போகும்படி நம்மைத்தூண்டிற்று. நாம் கவலையுடனும் நம்பிக்கையற்றும் இருந்த நாட்கள் பறந்துபோய்விட்டன. உண்மைக்கும் தேசமீட்சிக்கும் வழிகாட்டியதும் சுவாதீனக்கொடியின் கீழ்தேசத்தாரை மறுபடியும் ஒன்று சேர்த்ததுமான நம்முடைய தேசீய சபையானது தனது இரண்டாம் வருஷத்தை ஆரம்பிக்கும் இச்சமயத்திலே ஆகாயத்தில் தோன்ற ஆரம்பிக்கும்வெற்றி விளக்குகள் இவ்வளவுகாலமாய் கஷ்டப்பட்ட நமது துர் அதிர்ஷ்ட தேசத்திற்குப்பட்டபகற்பிரகாச மென்னும் மீட்சியைக் கொண்டுவரும்படி நான் ஆண்டவனை பிரார்த்திக்கிறேன். (நீண்ட கரகோஷம்)

துருக்கிய தேசீய சபையின் இரண்டாவது வருஷப்பூர்த்திக் கொண்டாட்டத்தில் காஸி முஸ்தபா கமால் பாஷா கீழ்கண்ட பிரசங்கம் செய்தார்:—

இன்றோடு நமது தேசீயசபை ஏற்பட்டு 2வது வருடம் பூர்த்தியடைந்து மூன்றாவது வருடம் ஆரம்பமாகின்றது. இவ்வெற்றிக்காக நான் முதலில் கடவுளுக்கு வந்தனஞ் செலுத்துகிறேன். இச்சபையாரும் ராணுவமும் சென்ற 12 மாதகாலமாக விடாமுயற்சியுடன் செய்த காரியங்களுக்காக அவர்களுக்கு வந்தனமளிக்கின்றேன். சுதந்

தர உணர்ச்சியானது நம்மிடை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது தெளிவாகத் தெரியவருகின்றது. நம்முடைய விரோதிகள் செய்யும் சகிக்கமுடியாத காரியங்களால் நாம் யுத்தத்தை நடத்த வேண்டியிருக்கின்றது. சென்ற 2 வருடத்தில் நடந்த காரியங்களுள் முக்கியமான காரியமென்னவென்றால்; பிரஜைகளும் ராணுவ வீரர்களும் யுத்தகாலத்தில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் அதனை எவ்வாறு எதிர்த்துநிற்கவேண்டுமென்பதையும் அனுபவ பூர்வமாக உணர்ந்துகொண்டதேயாகும். நாம் யுத்தத்தில் இறங்கவேண்டியிருப்பதன் அத்தியாவசியத்தையும் அவர்கள் அறிந்துகொண்டிருக்கிறார்கள். ஆதலால் நமது தேசத்தாருள் இருக்கும் இம்முக்கியமான உணர்ச்சிகளுக்கு நான் வந்தனஞ் செலுத்திவிட்டு உள்நாட்டு நிலைமையும் பொது நிலைமையையும் பற்றி நான் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களைக் கூற விரும்புகின்றேன்.

உள்நாட்டு நிர்வாக சம்பந்தமான கொள்கைகள் எப்படிப்பட்டனவாயிருக்க வேண்டுமென்று நம்மால் செய்யப்பட்டுள்ள சட்டத்தின் முதல்விதியிலும் தேசிய வாதிகளின் ஒப்பந்தத்தின் 1-2 வது நிபந்தனைகளிலும் கூறப்பட்டிருக்கின்றன.. அதன்படி நமது தேசத்தினர் யாதொரு நிபந்தனையுமின்றி தங்களுடைய அதிகாரமனைத்தும் விட்டுவிடுவதால் அவர்கள் தங்களுடைய இலக்ஷியத்தைத் தாங்களே ஒழுங்குப்படுத்திக் கொள்ளக்கூடியவாறு நமது உள்நாட்டு அரசாங்க முறை இருக்கவேண்டுமென்று ஏற்படுகின்றது. பல மாகாணங்களில் நிர்வாகிகளிடமிருந்தும் முனிசிபாலிட்டிகளிடமிருந்தும் வரும் சட்ட சம்பந்தமான

மசோதாக்கள் அங்கீகரிக்கப்படும். அதனால் அவை சட்டமாகி இருக்குமென்பதற்கு ஐயமில்லை. இஃதில்லாமல் தற்பொழுது ஆலோசனையிலிருக்கும் மசோதாவானது சட்டமாக நிறைவேறி விட்டால் பிரதிநிதி சபை (மந்திரி சபை)க்கே எல்லாப் பொறுப்பும் அதிகாரங்களுங்கொடுக்கப்படும் அப்பொழுது நம்முடைய நிர்வாக முறையானது இன்னும் தெளிவாகவும் திட்டமாகவும் இருக்கக்கூடும். துருக்கியர் மதத்தாலும் கல்வியாலும் ஜாதி முறையாலும் தங்களுள் ஒருவருக்கொருவர் உள்ள சம்பந்தங்களாலும் உரிமைகளாலும் இலக்ஷத்தாலும் ஒன்றுபட்டிருக்கின்றனர். சமூகத்தில் பல தேசங்களிருந்தாலும் பரஸ்பர உணர்ச்சியும் மரியாதையும் ஏற்படும்படி செய்வது தான் நமது உள்நாட்டு கொள்கைகளுள் முக்கியமானது. நம்முடைய அரசாங்கம் நல்ல அரசாங்கமென்பதற்கு எவ்வளவு பரஸ்பர உணர்ச்சியும் மரியாதையும் பெற்று இருக்க வேண்டுமோ அவ்வளவு நமது உள்நாட்டரசாங்கத்திலும் ஏற்பட்டு அபிவிருத்தியடையும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது மிகவும் அவசியமானது. வெளிநாடுகளில் விரோதிகள் இருப்பதால் நாமிருவரும் மிகவும் ஒற்றுமையாக இருக்கவேண்டுமென்பது மிக அத்யாவசியமானது.

கிறிஸ்தவர்கள் நம்நாட்டு ஜனத்தொகையில் சிறு பான்மையோராக இருக்கின்றார்கள். நேசதேசங்களுடனும் அவர்களுடையவிரோதிகளுடனும் செய்துகொண்ட உடன்படிக்கை நிபந்தனைகளின்படி அவர்களுக்குள்ள உரிமைகளனைத்தும் அளிக்கப்படும். பக்கத்து தேசங்களிலுள்ள முஸ்லீம்களும் அதேயுரிமைகளை அனுபவிப்பார்களென்று

தெரியவருகின்றது. மற்ற விஷயங்களும் நமது பிரஜைகள் அனைவரும் சந்தோஷமாகவும் க்ஷேமமாகவும் வாழும்படியாக நமது அரசாங்க முறையும் கொள்கையும் இருக்குமென்பதில் ஐயமில்லை. சட்டப்படி அவர்களுக்கேற்பட்ட உரிமைகள் பாதுகாக்கப்படும். அதேசமயத்தில் தேசத்தின் சட்டங்களும் சமமாகக் கையாளப்படும்.

சென்ற வருஷ ஆரம்பத்தில் அஞ்ஞானத்தின் பயனாகவும் பிசகின் பயனாகவும் கோட்கிர் என்றவிடத்தில் ஒருசம்பவம் நடந்தது. அப்பொழுது கையாண்ட முறைகளால் சமாதான மேற்படாதுபோகவில்லை. இந்தபயித்தியக்காரத்தனமானகாரியத்தில் ஏமாந்துபோய்சிக்கிக்கொண்டவர்களை அரசாங்கத்தார் நீதிமுறைப்படி தண்டித்தனர். அவர்கள் வேண்டியபால் அளவு கருணையுங் காட்டியிருக்கிறார்கள். கிரேக்கர்களுடைய தூண்டுதலின்மேல் ஜனங்களைத் தூண்டிவிட்ட சிலருடைய உத்தேசங்கள் பலிக்கவில்லை. நாட்டை பாதுகாத்து அரசாங்கம் நடைபெறும்படி உதவிசெய்யும் போலீஸ் படைகளின் தொகை அதிகப்பட்டிருக்கிறது. அவகளுடைய வேலையில் பயிற்சியளிக்கும்பள்ளிக்கூடங்களின் தொகை அதிகமாகி இருக்கின்றது. தபால் தந்தி இலாகா இவற்றின் நிர்வாகத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டமாறுதல்களும் திருப்தியை அளிக்கின்றன. அரசாங்கத்தின் முக்கிய நோக்கமென்னவென்றால், தேசத்தின் அமைதியை நிலைநிறுத்தி ஜனங்கள் சமாதானத்துடன் வாழக்கூடுமென்று அவர்களுக்கு உறுதிமொழி யளிப்பதேயாகும். அரசாங்கத்தார் பொதுஜனசுகாதாரத்தைக்கவனிப்பது சம்மந்தமாகவும் சமூகத்தில் ஏற்பட்டுள்ள கெடுதியையும் போக்குவது

சம்மந்தமாகவும் தங்களால் தற்காலம் எவ்வளவு சிறத்தை யை காட்டக்கூடுமோ அவ்வளவும் காட்டி வருகிறார்கள்.

1920-ஹூ இந்நாட்டில் 260 வைத்தியர்களே இருந்த னர். சென்றவருடத்தில் அவர்களின தொகை 312 ஆயிற்று இப்பொழுது மற்றும் 50 வைத்தியர்களுக்கு வைத்தியவு தவிதேவையாக இருக்குமிடங்களில் வேலைசெய்ய வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டியிருக்கின்றது. இவ்வருஷம் தொத்து வியாதிகள் பரவுவதைத் தடுக்கவேண்டிய முயற்சி செய்ய தயாராக இருக்கின்றோம். நமது நாட்டில் அம்மை ப்பால் மிகத்தேவையாக இருப்பதனால் சிவாஸ் என்ற விட த்தில் பசுமாடுகளிலிருந்து 30லக்ஷம் தடவைக்கு உபயோ கப்படும்படியான அம்மைப்பால் எடுக்கப்பட்டது

மலேரியா என்றழைக்கப்படும் விஷசுரத்தால் பீடிக்கப் பட்டுள்ள பிராந்தியங்களுள் ஏராளமாக கொயினா வழங்கப் பட்டிருக்கின்றது மேகநீர் சம்மந்தமான வியாதிகளை போக் குவதற்கும் ஏராளமாகப் பணஞ்செலவிடப்பட்டிருக்கின் றது.

யுத்தத்தால் நமது தேசத்தார் அடைந்து வரும் கஷ் டங்களைப் போக்குவதற்காக நாம்பலனுள்ள முறைகளைக் கையாள ஆரம்பித்திருக்கின்றோம். கீழ்த்திசையிலுள்ள மாகாணங்களில்வசிக்கும் ஜனங்களில் காற்பங்கு ஜனங்கள். இங்குவந்து தங்கியிருக்கின்றனர். அவர்களில் பாதிப்பேர் அவர்களுடைய பழைய வீடுகளுக்குக் கொண்டுபோய் விட ப்பட்டனர். சமீபத்தில் கிரேக்கர் வசமிருந்து அடானா,

காஜிடிஞுப் முதலிய நகரங்கள் மீட்கப்பட்டன. அங்கிருந்து முன்பு இந்நாட்டிற்கு ஓடிவந்து வசிக்கின்றவர்களை அவர்களுடைய வீடுகளுக்கனுப்பிவிட்டோம். இன்னும் மீட்கப்படாமலிருக்கும் மேற்றிசையிலுள்ள மாகாணங்களிலிருந்து இங்கு வந்து தங்கியிருக்கின்றவர்களுடைய கஷ்டத்தைக் குறைக்க எவ்வளவு வசதிகள் செய்யக்கூடுமோ அவ்வளவையும் செய்து வருகின்றோம்.

தங்களுடைய வீடுகளுக்குத் திரும்பிச் செல்லுகின்றவர்களுக்கு உணவுப் பொருள்கள் கொடுக்கின்றோம். விதைக்கக்கோதுமைகள் கொடுக்கின்றோம். மேலும் வரிகொடுக்க வேண்டாமென்று கூறிவிட்டோம். வேறிடங்களிலிருந்து ஓடிவந்து வசித்தவர்கள் தங்கியிருந்த விடங்களை அநாதைக் குழந்தைகளுக்கு வசதியுள்ளதாகவும் தொழிற்சாலைகளாகவும் மாற்றி வருகின்றோம். நம்முடைய ராஜ்ஜியத்தின் எல்லைக்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் ஓடிவந்து வசிக்கும் முகமதியர்களுக்குச் சிறிது பணவுதவி செய்கின்றோம் இவ்வருஷமுதல் அப்படிப்பட்டவர்களையும் நம்நாட்டில் வீடுகளை இழந்து இருக்கின்றவர்களையும் குடியேறும்படி செய்வதற்காக வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப் போகின்றோம். தேசத்தார்களது சுகாதாரத்தைப் பாதுகாத்து அவர்களது தேகதிடத்தை அபிவிர்த்தி செய்யவும் மறணவிகிதத்தைக் குறைக்கவும் ஜனவிகிதத்தை அதிகப்படுத்தவும் தொத்து வியாதிகளின் வேகத்தையும் சமுகக்கஷ்டங்களையும் குறைக்கவேண்டுமென்று நோக்கங்கொண்டுழைத்து வருகின்றோம். சுருங்கக்கூறின் பிரஜைகள் சுகஜீவிகளாக வாழவேண்டு

வதற்காக மேற்கூறிய முறைகளைக் கையாண்டு வருகின்றோம். தங்களது வீடு முதலியனவற்றை விரோதிகளின் வசம் விட்டு விட்டு வெளியிடங்களில் ஓடிவந்து வசிக்கின்றவர்களுக்கு நம்மிடை வசிக்க வீடு முதலிய வசதிகள் ஏற்படுத்த முயன்று வருகின்றோம். இம்முக்கியமான விஷயங்களை நன்கு ஆராய்ந்து இவற்றைச் செய்து முடிக்கவேண்டிய திட்டத்தையும் தயாரித்திருக்கின்றோம்.

நாம் ஆதியில் எந்தக்கட்டுப்பாடான கொள்கையுடன் வேலைசெய்ய ஆரம்பித்தோமோ, அந்த கொள்கையை அனுசரித்தே அன்னிய நாடுகளிடம் நடந்து கொண்டிருக்கின்றோம் அக்கொள்கையை, அதாவது நமது தேசீய ஒப்பந்தத்தை எந்த தேசம் ஒப்புக்கொண்டு நமது சுயேச்சையை ஆட்சேபிக்காமலிருக்கிறதோ அந்த தேசங்களுடன் நாம் சினேகபாவமாகவே யிருப்போம். நமது சுயேச்சையை ஒப்புக்கொள்ள இஷ்டப்படும் மற்ற தேசங்களோடும் நட்புபாராட்ட நாம் தயாராயிருக்கிறோம். ருஷ்யஸோவியத் கவர்ன்மெண்டுதான் முதன் முதலாக நமது கட்சியை ஒப்புக்கொண்டதாகையால் அந்த கவர்ன்மெண்டாருக்கும் நமக்கும் உள்ள சம்பந்தத்தை பலப்படுத்துவதுதான் நமது பிரதான கொள்கையாகும் (கரகோஷம்) ஆனல் அதன் பொருட்டு நமது உரிமைகளை ஒப்புக்கொள்ளும்வேறெந்த நாட்டினரிடத்திலும் நட்புப் பாராட்டாமலிருக்க மாட்டோம். வலுவில் எவரையும் தாக்குவது நமது கொள்கையன்று வேறெந்த தேசத்தின் சுதந்தரத்தையும் கெடுக்க நமக்கு உத்தேசமில்லை. நமது உரிமைகளைப் பாதுகாப்பதோடு நாம் நின்றுவிடுவோம் நமது கௌரவத்தை எவ்விதத்திலும் காப்பாற்

றிக்கொள்வோம். அவ்வாறு காப்பதில் எந்த அளவுக்குத்தி யாகம் செய்யவும் நாம் அஞ்சமாட்டோம் (பலத்த கரகோஷம்.)

அந்தந்த ஜாதியார் தங்களுக்குத் தாங்களே எஜமானர்களாயிருக்க வேண்டுமென்ற தர்மத்தை எவரும் ஆட்சேபிக்கக்கூடாது. ஒரு ஜாதியாரின் நியாயமான கோரிக்கைகளை மற்றொரு ஜாதியார் ஆட்சேபிப்பதால்தான் வீண், உயிர்ச்சேதத்துக்கு இடமேற்படுகிறது. நாம் வேண்டுமென்று இரத்தச்சேதம் விளைவிக்கவில்லை. நமது உரிமைகளை ஆட்சேபித்து நம்மை எதிர்ப்பவர்கள்தான் இரத்தச்சேதத்துக்குக் காரணமாவார் (ஆண்டவன் சாபம் அவர்கள் மீது விழட்டும் என்ற கூக்குரல்) எந்த நாட்டின் பலாத்காரத்துக்கும் நாம் அஞ்சமாட்டோம், எவரும் நம்மை பயமுறுத்தமுடியாது இருப்பதா இறப்பதா என்ற நிலைமையில நாம் தைரியமாக போராடியே தீருவோம். ஒரு புழுக்கூட தன்னை மிதிப்பவர்களைத் திரும்பிப்பார்த்து எதிர்க்க முயலுவது சுபாவம். நமது பரம்பரை என்ன? நமது சக்தி என்ன? தற்காலம் ஏற்படக்கூடிய பொருளாதாரக கஷ்டங்களுக்காக நாம் பயப்பட வேண்டியதில்லை நமது நாடு வளப்பமுடையது. நாமேன் அஞ்சவேண்டும்? நமது சைன்யங்கள் அற்புதமான வேலை செய்து வருகின்றன ஏற்கெனவே அபிஸீனியா வாசிகள் அபேச்சையை ருசி பார்க்க ஆரம்பித்துவிட்டனர். நமது சைன்யம் நம்மை என்றைக்கும் காப்பாற்றுமென்பதில் சந்தேகமில்லை நம்மை பயமுறுத்திவிடலாமென்று நினைக்கும் சத்துருக்கள் நிச்சயம் ஏமாற்றமடைவர். நம்மை அடிமைகளாக்க எவர் முயன்றபோதிலும்

அதை தைரியமாக எதிர்க்கத் தீர்மானித்துவிட்டோம். (கரகோஷம்) நமது ஸத்தியமான கொள்கைகளையும் நமது நியாயமான கட்சியையும் எடுத்துச் சொல்லவே நமது அன்னிய நாட்டு மந்திரி பத்திபேயை வெளியே அனுப்பியிருக்கின்றோம்.

கான்ஸ்டாண்டி நோபில் பட்டணத்தின் புனிதத்தன்மையை நீங்கள் ஒவ்வொருவரும் அறிவீர்கள். நமது நபிகள் நாயகம் அந்நகரின் விஷயத்தில் நேசமான சிரத்தை கொண்டிருந்தார். மஹாமதிப்புவாய்ந்த ஈபா யூபல் அன்சாரி கபீத்தின் கோரி அங்குதான் இருக்கிறது. அவருடைய ஆத்மா அங்குலாவிக்கொண்டு எல்லோரையும் ரட்சிக்கின்றது 500 வருஷகாலமாக உதுமானிய கவர்ன்மெண்டுக்கு அதுவே தலைமைப் பட்டணமாக இருந்து வந்திருக்கிறது (இனியும் மீண்டும் அப்படியே யிருக்கும் என்ற கூக்குரல்) முஸல்மான்களின் தியாகமே உருவாகத் தோன்றியதுபோல் அப்பட்டணம் இருக்கிறது. நமது உத்தமமான நாகரீகத்தை அது வெளிப்படையாகக் காட்டுகின்றது. எவ்விதமான ஆபத்தும் அப்பட்டணத்துக்கு வராமல் நாம் பாதுகாத்தே தீர வேண்டும். (காகோஷம்) அக்கடமையில் நாம் தவறக்கூடாது எவ்வளவோ கஷ்டங்களைப் பொறுத்துக்கொண்டு கான்ஸ்டாண்டி நோபில் முஸல்மான்கள் தியாகபுத்தி காட்டிவருவதை நான் பாராட்டுகின்றேன். நமது அனுதாபத்தையும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நமது நாட்டில் நாம் எஜமானர்களாயிருப்பதை எவர் தடுப்பது? நமது கொள்கையை எவர் ஆட்சேபிப்பது? அங்

னம் ஆட்சேபிப்பவர்கள் இத்தேசத்துக்கு துரோஹிகள், கலகக்காரர்கள். அத்தகையோரை நமது ஜாதி பழிவாங்கியே தீரும்.

பால்கன் நாடுகளுக்கு நம்மிடத்தில் அனுதாபமுண்டு. நமது நட்பினுல் ஏற்படக்கூடிய நன்மைகளை பல்கேரியா நன் கறிந்திருக்கிறது. அல்பேனியாவுக்கும் நம்மை நன்ருகத் தெரியும். ஸர்வியா என்ற ஜூகோஸ்லாவியாவுக்கும் நமக்கும் சத்துருக்கள் ஒருவர்தான். ஆகையால் அந்த உண்மையையறிந்து ஸர்வியா நடந்து கொள்ளவேண்டும். நமது மதத்தைச் சேர்ந்தவர்கள் எங்கிருந்தபோதிலும் நமது தற்கால நிலைமையில் அனுதாபங் காட்டாமலிருக்க மாட்டார்களென்பது நிச்சயம்.

வாஷிங்டன் ஜினீவா முதலிய கான்பரன்ஸ்களில் செய்யப்படும் தீர்மானங்கள் மனப்பூர்வமாயிருந்தால் துருக்கிஸ்தானத்திலும் அத்தீர்மானங்களின் கருத்துப்படி நடந்து கொள்வதுதான் நியாயம் நாடு பிடிக்கும் ஆசையைவிட்டொழித்ததாகச் சொல்லுவோருக்கு நமது ஜன்மபூமியில் மட்டும் என்ன வேலை? அமெரிக்காவும் நமது வேலையில் சிரத்தை காட்டவில்லை. சமீப கீழ்த்திசைப் பிரதேசங்களில் சமாதான மூண்டு பண்ணுவதற்காக வேறிடங்களில் கான்பரன்ஸ் கூட்டிப்பார்த்தும் பயனில்லை. நமது சைன்யங்கள் வெற்றியடைந்து யுத்த களத்திலேயே கான்பரன்ஸ் கூடும்படி செய்யலாமாவென்றே நாம் இனி யோசிக்கவேண்டியிருக்கும். நமது கொள்கையை விட்டுக்கொடுக்கக்கூடாது எந்த ஆபத்துக்கும் நாம் தயாராயிருக்கவேண்டும். நமது

யுத்த வீரர்கள் இருக்கும் வரையில் நாம் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். நமது சைன்யம் சாமான்யமான தன்று. யுத்த காலத்தில் யுத்தம் நடத்தவும் சமாதான காலத்தில் உதவியாயிருக்கவும் நமது சைன்யங்களுக்குத் தெரியும் நமது சைன்யபலமும் நாம் செய்திருக்கும் ஏற்பாடுகளும் சத்துருக்களுக்குத் தெரியாது. நமது பலத்தை யறியாமல் பலவிடங்களில் சண்டை போட்டுத் தோல்வியுடைந்திருக்கிறார்கள்.

கிரேக்கர் செய்துள்ள அட்டூழியங்களைப் பாருங்கள். சண்டையில் தோற்றுப் பின்வாங்கும் போதுகூட அட்டூழியங்கள் செய்துகொண்டேபோகிறார்கள் கிரேக்க இளவரசர்களும் கிரேக்க தளகர்த்தர்களும் நிரபராதிகளான துருக்கியரை வதைப்பதில் சந்தோஷப்படுகிறார்கள் முஸ்லீம்களை மானபங்கப்படுத்துகிறாகள். (ஆண்டவன் சாபம் அவர்கள் தலையில் விழட்டும் என்ற கூக்குரல்) ஜீவகாருண்யமே அவர்களுக்குக் கிடையாது கட்டுப்பாடாக அட்டூழியம் செய்துவருகிறார்கள். அவர்கள் என்ன செய்தபோதிலும் நமது வீரர்களுக்கு வெற்றியே கிடைத்துவருகிறது நமது சைன்யம் எதற்கும் தயாராயிருக்கின்றது ஆயுதங்களுக்கும் தளவாடங்களுக்கும் குறைவில்லை குண்டுகளுக்கும் தோட்டாக்களுக்கும் பஞ்சமில்லை. கம்பியில்லாத்தந்தி முதலிய சாஸ்திரக்கருவிகளும் நம்மிடத்தில் வேண்டிய அளவு இருக்கின்றன துருப்புகளின் சுகாதாரமும் திருப்தியாயிருக்கிறத் தொத்து வியாதிகள் கிடையாது நமது ஜனங்களும் சைன்யத்தோடு ஒத்துழைத்து வருவதற்கு நன்றி பாராட்டுகிறேன்.

நமது தேசீய சபை அபாரவேலை செய்திருக்கின்றது. போன வருஷத்தில் 271 பஹிரங்கக்கூட்டங்கள் நடந்திருக்கின்றன. பல இரகஸ்யக்கூட்டங்களும் நடந்திருக்கின்றன 355 விஷயங்கள் சபைக்கு வந்தன 242 தஸ்தாவேஜிகளைப்பற்றி விவாதம் நடத்தியிருக்கிறோம். 106 மசோதாக்கள் பார்லிமெண்டில்நிறைவேறியபின்தேசீய சபைக்குஅனுப்பப்பட்டிருக்கின்றன. தேசீய சபை அங்கத்தினர் சபையிலும் வெளியிலும் மிகுந்தசிரத்தை காட்டியுழைக்கிறார்கள் பொய் பிரசாரத்துக்கும் எதிர் பிரசாரமும் செய்கிறார்கள் யுத்தத்திலும் மற்றபடியும் தேசத்துக்காக உயிரை இழப்பவர்களுக்கு இச்சபை நன்றி பாராட்டுகின்றது. (எல்லோரும் சபையில் எழுந்து நின்று மரியாதை செய்தார்கள்.)

எனது அருமைத் தோழர்களே! நமது ஒற்றுமையில் தான் பலமிருக்கிறது உற்சாகத்துடன் தியாகம் செய்யவேண்டும் அதி சீக்கிரத்தில் வெற்றி கிடைத்துவிடுமென்பதற்கு அறிகுறிகள் இப்பொழுதே தென்படுகின்றன். வரவர நம்பிக்கை அதிகமாகிறது. அதைரியப்படவே இடமில்லை. நம்பிக்கையுடன் வேலைசெய்தால் நிச்சயம் ஜெயமடைவோம் (கர கோஷம்) நமது தாய் நாடு ஒருக்காலும் அழியாது. ஒரு போதும் சாகாது ஒரு சமயம் செத்து போனாலும்கூட அதன் ஜனாசாவைத் (பாடையை) தூக்க உலகத்தால் முடியுமா? பாரம் கழுத்தை முறித்து விடாதா?

"நியூயார்க் ஹெரால்டு" பத்திரிகை பிரதிநிதியிடம் முஸ்தபா கமால் பின் வருமாறு கூறினார்:—

தங்களுடைய சுதந்தரங்களைப் பெறுவதற்காக துருக்கியர் செய்துள்ள தியாகங்களையாவது அன்றி அவர்கள் பட்டகஷ்டங்

களையாவது அமெரிக்கா உணரவில்லை என்று தோற்றுகிறது அமெரிக்கா அவற்றை உணர்ந்திருந்தால் சமீபகீழ்த்திசையில் நடந்த சம்பவங்களைப்பற்றி அபிப்பிராயங்கொள்ளுவதில் அமெரிக்கா அரசாங்கத்தாரும் சற்று அதிக நியாயமாக நடந்திருக்கும். அமெரிக்கர்கள் 150 வருஷங்களுக்குமுன் செய்ததைப் போலவே தற்பொழுது துருக்கியரும் அந்நியாது ஆதிக்கத்தையும் அந்நியர் தங்களது நாட்டிலுள்ள பொருள்களை சுரண்டிசெல்வதையும் போக்குவதற்காகச் சண்டை செய்து வருகின்றனர். எனெனில் சென்ற நூற்றாண்டுக்குள் துருக்கியானது ஐரோப்பிய வல்லரசு குடியேற்ற நாட்டின் ஸ்திதை அடையும்படி செய்து விடப்பட்டது. துருக்கியின் எதிர்கால அரசாங்கமானது முற்றிலும் ஜனநாயகமுள்ளதாக இருக்கும் அரசுரிமை ஜனங்கள் வசமே இருக்கும் அது ஜனப்பிரதிநிதிகளடங்கிய தேசிய சபையினுல் அமுலுக்கு கொண்டு வரப்படும். ஒரு நூற்றாண்டுக்கதிகமான காலத்திலிருந்தே இம்மாதிரி ஜனநாயக ஆட்சியை ஸ்தாபித்துக்கொள்ள துருக்கியர் முயன்று வந்திருக்கின்றனர் மேனுடுகளில் அரசியலும் சாஸ்திரிய விஷயங்களிலும் ஏற்பட்டுள்ள முன்னேற்றதின் முக்கியாம்சங்களை கிரகித்து அனுஷ்டிக்க துருக்கியர் முயன்றிருக்கின்றனர் 19ம் நூற்றாண்டில் ஐரோப் பாவிலிருந்து நிபுணர்களை தரவழைத்து சீர்திருத்தங்களைச் செய்ய துருக்கியிலுள்ள கல்விமான்கள் முயன்றனர். ஆனல் துருக்கியர்கள் முன்னேற்றமடைய வொட்டாதபடி செய்வதற்கு ஐரோப்பிய ராஜதந்திரிகள் பல தடைகளை ஏற்படுத்தி இருக்கின்றனர். அவர்கள் துருக்கியர் எங்கு ஐரோப்பியரது ஆதிக்கத்தையும் வியாபாரக் கொள்ளையையும் போக்கி விடுவார்களோ் என்று அஞ்சி துருக்கியை பலமுள்ளதாகவும் செழிப்புள்ளதாக ஆகவொட்டாதபடி தடுக்க தங்களால் ஆனகாரியங்களை செய்திருக்கிருர்கள். ஐரோப்பாவானது சுயநலத்தை உத்தேசித்து சிறிய சீர்திருத்தங்களைக்கூட எதிர்த்து வந்தது. அவர்

கள் புத்துயிர் பெரும்படி விடவில்லை. ஆனால் இவைற்ருல் துரு க்கியரின் சுதந்தரத்தாகம் அதிகமாகி இறுதியில் அங்கோராவில் கூடி அவர்ளை வெளியிட்டனர்.

வெற்றி பெற்ற துருக்கியர்கள் பிறருடைய அனுமதிகேட் காமலே நாகரீகம் வாய்ந்த எல்லா ஜாதியினருக்கும் உள்ள ரா ஜீய உரிமைகளையும் தாங்களாகவே பெற்று வருகின்றனர். நான் அமெரிக்கா நிபுணர்களது உதவியை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்வேன். இரண்டு நாடுகளும் நெருங்கிய வியாபார சம்பந்தம் எற்படுவதால் அமெரிக்கர்களது வியாபார முறைகள் துருக்கியர்கள் கற்றுக் கொள்ளக் கூடுமென்று நம்புகிறேன். துருக்கியில் அமெரிக்க வியாபாரத்துக்கு யாதொரு பங்கமும் வாராதபடி அதற்கு பாதுகாப் பளிக்கக்கூடு மென்பதை அமெ ரிக்கர்கள் நம்பலாம்.

வெகுமதிகள்

எகிப்திலுள்ள கிலாபத்து அபிமானிகளின் சங்கம் ஒன்று சமீபத்தில் காஸி மூஸ்தபாகமால் பாஷா அவர்களு க்கு ஒருவாளும், காஸி இஸ்மத்பாஷா அவர்களுக்கு ஒரு மைக்கூடு பேனாவும் இனாமாக அளித்தது. கமால் பா ஷா அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பரிசானது, அவர் ஒரு சிறந்த வீரர் என்பதையறிவுறுத்துவதாகும். காஸி இஸ் மத் பாஷாவிற்கு அளித்தபரிசானது, அவர் ஒரு சிறந்த ராஜதந்திரி என்பதையறிவுறுத்திக்காட்டுகின்றது. இச் சங்கத்தார் அளித்த பரிசு மிகச் சொற்பமானவைகளேயா யினும், இஸ்லாத்திற்காக அரியவேலை செய்த இவ்விரு மஹான்களின் ஊழியத்தையும் நன்குவிலக்கிக்காட்டும் அறி குறிகளையுடையதாய் இருக்கின்றன.

முஹம்மத் பாஷா அவர்களின் கபரில் (சமாதியில்) ஒரு புதையல் வெளிப்பட்டிருக்கிறது. அது பேஸந்தாயின் காலத்துடைய தென்று தீர்மானிக்கப்பட்டது. அவைக ளின் மதிப்பு துருக்கிய அநேக கோடி பவுன் என்று தெரி கிறது. துருக்கியானது ஆண்டவனுக்கு பொருத்தமும சந் தோஷமும் உள்ளகாரியங்களைச்செய்து வந்தமையாலேயே ஆண்டவன் துருக்கியின் பால் அன்பும ஆதரவும்கொண்டு, அதற்குயுத்தத்திலும் சமாதானத்திலும ஜெயத்தை அளித் ததுமன்றி, இப்போது புதைபொருளையும் அதற்கு நன் கொடையளித்திருக்கிறுன் என்று நினைக்கவேண்டியிருக் கிறது. ஆண்டவனை நம்பி அவனுடைய ஊழியத்தை நேர் மையுடன் செய்கிறவர்கள அவனுல் ஆதரிக்கப்படுவார்கள் என்பது இதனுல் நிதர்சனமாகிறது!

துருக்கியக்குடியரசு

துருக்கியைக்குடியரசாகச் செய்யவேண்டுமென்றும், தம்மைக்குடியரசுத் தலைவராகத் தெரிந் தெடுக்கவேண்டு மென்றும் முதன் மந்திரியை நியமிக்கத் தமக்கு அதிகாம மிருக்கவேண்டுமென்றும் காஸி மூஸ்தபாகமால் பாஷா துருக்கிதேசிய சபையில் 1923ஹு அக்டோபர்மீ 30வ கொண்டு வந்த பிரேரணையை பொது ஜனக்கட்சியார் ஏற்று க்கொண்டு விட்டனர்.

கீழ்கண்ட பிரேரணைகளும் காஸி முஸ்தபா●மால் பா ஷா வினுல் கொண்டு வரப்பட்டு பொது ஜனக்கட்சியால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

(1) துருக்கியின் துரைத்தனத்தின் அமைப்பு துருக்கியருக்குரியதாயிருக்கவேண்டும். இஸ்லாம்மார்க்கமே துருக்கிய நாட்டின் மதமா யிருக்கவேண்டும்.

(2) குடியரசின் தலைவர் பொது ஜனப்பிரதிநிதிகளால் தெரிந்தெடுக்கப்படுவார். ஒவ்வொரு தேர்தலிலும், தலைவருக்குக் கிடைக்கும் தேர்தல் கட்டளை நான்கு வருஷங்களுக்கு அமுலி லிருக்கும் (அதாவது இத்தலைவர் நான்கு வருஷங்களுக்கு வேலையிலிருப்பார்).

(3) ஒரு தடவை தலைவராயிருப்பவர் மீண்டும் தலைவர் பதவிக்குத் தெரிந்தெடுக்கத் தகுதியுள்ளவராக யிருப்பார். இப்படித் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டவரே துரைத்தனத்தின் தலைமை அதிகாரியா யிருப்பார். மந்திரி சபைக்கும் தேசீய சபைக்கும் அத்தலைவரே அக்கிராஸனராயிருப்பார்.

(4) கமிஸ்ஸார் கவுன்ஸிலின் தலைவரைக்குடியரசுத் தலைவரே நியமிப்பார். இந்த கமிஸார்கள் தங்களுடைய உடன் வேலைக்காரர்களைத்தாமே பொறுக்கி எடுத்துக்கொள்வார்கள்; கமிஸ்ஸார்களின் பெயரடங்கிய ஜாப்தாவைத் தேசீய சபைக்குக்காட்டி அந்த ஜாப்தாவுக்கு அச்சபையின் சம்மதிப்பைக்குடியரசுத் தலைவர் பெறவேண்டும்.

மந்திரி சபையை இணைக்கவேண்டு மென்று தலைவர் முஸ்தபா கமால் பாஷா கூறியதை காஸி இஸ்மத் பாஷா ஏற்றுக்கொண்டு கீழ்கண்டபடி மந்திரி சபையை ஏற்படுத்தினர்.

புதியமந்திரி சபை

காஸி இஸ்மத் பாஷா—முதன் மந்திரி, அயல் நாட்டு மந்திரி. பரித்பே--உள்நாட்டு மந்திரி. காஸிம் பாஷா--பாது காப்புமந்திரி. பவ்ஸிபே-இஸ்லாம்மார்க்கவிஷயங்களைப்பற் றிய மந்திரி. ஹஸன் பஹ்மி—பொக்கிஷ மந்திரி.

குடியரசுத் தீர்மானம் நிறைவேறியவுடன் 101 மரியா தைகுண்டுகள் போடப்பட்டன. தேர்தல் நடந்தேறிய பிறகு, தெருக்கள் வழியாகத் தமது வண்டியில் சென்றார். அப்பொழுது அத்தெருக்களில் வரிசை வரிசையாக நின்று கொண்டிருந்த துருப்புகள் ஆரவாரம் செய்தனர். குடியர சுமுறையைத் தாங்கள் வரவேற்பதற்கு அடையாளமாக, அங்கோராவிலுள்ள பொது ஜனங்கள் தமது நகரத்தில் தீபாலங்காரம் செய்து எங்குபார்த்தாலும் தோரணம் முதலிய அலங்கார சாமான்களைக் கட்டினார்கள். துருக் கிக்கு காஸி முஸ்தபா கமால் பாஷா அவர்கள் புத்துயிர் கொடுத்து, புதிய வீரத்துருக்கியாகப் புனர் நிர்மாணம் செய்திருப்ப தொன்றே அதற்கு போதுமான போக்பதை யாகும். துருக்கியுத்தத்தின் முன்னணியில் நின்று உழை த்து லாஸேன் மகாநாட்டில் துருக்கியின் கீர்த்தியை நிலை நாட்டிய பெரியாருக்கு, இதை விடத்துருக்கி செய்யக் கூடிய நன்றிவேறெதுவுமில்லை. காஸி முஸ்தபா கமால் பாஷாவின் வீரத்தாலும் சாமார்த்தியத்தாலும் திறமையினா லும் குடியரசுத்துருக்கி மென்மேலும் வளர்பிறை சந்திர னைப்போல வளர்ந்து வரவேண்டுமென்று நாம் ஆண்ட வனை வேண்டுகிறோம்.

லாஸேன் வுடன் படிக்கையின் படிநேசதேசப் படைகள் கான்ஸ்டாண்டி நோபிலே விட்டு காலி செய்து விட்டன. துருக்கி துருப்புகள் அக்டோபர் மீ 6வ நைஹாக்ரிபேயைத் தலைவராகக் கொண்டு ஆசியாக் கரையிலிருந்து படகேறி, மார் மோராக்கடலைக் கடந்து, ஜனத்திரள்களின் ஆரவார கோஷத்தினிடையே உற்சாகத்துடன் தெருக்களின் வழியாகச் சென்றார்கள். பொதுஜனங்கள் புஷ்பங்களையும், கொடிகளையும், வாசனை சாமான்களையும் வரிசை வரிசையாக செல்லும் துருக்கிய துருப்புகள் மீது வர்ஷித்தார்கள். வழிகளெல்லாம் தோரணங்களும், கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. சாயங்காலம் தீவட்டி மத்தாப்பு வாண வேடிக்கைகளுடன் ஓர்ஊர்வலம் நடைபெற்றது.

மங்களம்

இப்புஸ்தகம் பயிண்டு செய்யப் போகுந் தருணத்தில் லாஸேன் உடன் படிக்கையின் ஷாத்துகள் பத்திரிகைகளில் வெளியாகி இருக்கிறதினால் ஷை ஷாத்துகளை சகலரும் அறியவேண்டிய தவசியமானதினால் அதை தனியாக அச்சிட்டிருக்கிறது. அதில் லாஸேன் வுடன் படிக்கையின் ஷாத்துகளும், துருக்கி தேசீய சபையில் உடன் படிக்கையை அங்கீகாரம் பெறுவதற்காக காஸி முஸ்தபா கமால் பாஷா அவர்களின் அரியபிரசங்கமும், சிலபிரதிநிதிகளின் ஆட்சேபணைகளும், அதற்கு தகுந்த காஸி இஸ்மத்பாஷாவின் ஆணித்தரமான பதிலும் கடைசியாக உடன் படிக்கை அங்கீகரிக்கப்பட்ட விதமும் தெளிவாக "லாஸேன் உடன்படிக்கை" என்ற பெயருடன் அச்சிட்டிருக்கிறது. இதன் விலை அணா 2

நமது நேயர்களுக்கு ஓர் விண்ணப்பம்

"குஹலுல் பஸர்"

என்னும் நேத்திர சஞ்சீவி.

இது ஆச்சரியத்தைக் கொடுக்ககூடிய அபூர்வமான சுர்மா கண்களுக்கு உபயோகப் படுத்துவதால் கண்சிகப்பு, கூச்சல், மங்கல், நீர்கட்டல், நீர்வடிதல், குத்தல், சதைவளருதல், பூவிழுதல், சாலேசுரம், அந்திமாலை, வெள்ளெழுத்து இமைதடிப்பு, இமைஅரிப்பு மயிர் உதிர்தல் முதலிய நேத்திர ரோகம் 66யும் எவ்வகை ஆப்ரேஷனன்னியில் சொஸ்தப்படுத்தி கண்ணொளியை தீட்சணியமாக்கிவிடும்.

மருந்தின் கிரயம்

1 தோலா எடையுள்ள மருந்து புட்டி 1-க்கு ரூ 5—0—0

½ தோலா எடையுள்ள மருந்து புட்டி 1-க்கு ரூ 2—12—0

தபால் சிலவு அணா 4 பிரத்தியோகம்

விலாசம்

மானேஜர்

ஜோருபாய் யூனானி மெடிக்கல் ஹால்.

நெ. 12. முத்து நாயக்கன் தெரு.

ஜார்ஜ்டவுன் மதருஸ்.

கபாலத்திலுண்டான சகலநோய்களையும் கண்டிக்கும்படியானதும் பரிக்ஷித்து அநேகரால் சர்டிபிகேட் பெற்றதுமான, எஸ். ஆர். சித்தாதி மூக்குத்தூள் என்ற பொடியை அவசியம் வாங்கி உபயோகித்து அதன் குணத்தைத் தெரியுங்கள்.

ஏஜண்டுகள் தேவை,

எஸ். ஆர். தேவர் அண் கோ.,

பொடி வியாபாரம்,

விட்டவாசல் மதுரை.

கொண்டா பிரஸ், மதுரை—1000—23.

786.

வெளியாகிவிட்டது!

தேசபக்தி மிக்க சீலர்களே!

அநேக நாளாக எதிர்பார்த்திருந்த ஜெகமெங்கும்புகழ்பெற்ற
செந்தமிழ்ப்பாவலர் கம்பமாநகர்
ஜனாப் மி. பீர் முகம்மது சாகிபவர்களால்
இயற்றிய

காந்தி மாலிகை.

என்னும் தேசியபாடல்களமைந்த புத்தகம் ஈரோடு ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களின் முன்னுரையுடன் வெளியாகி விட்டது. இதில் மகாத்மா காந்தி, தாஸ், நேரு, அஜ்மல்கான், மஸஹருல்ஹக். மோஹானி, சோட்டானி, ஸ்ரீ ராஜகோபாலாசாரி சவுரிராயன், சுப்ரமண்ய நாயனர், மட்டப்பாரை ஐயர், முகம்மது மௌலானா சாகிப், முதலான தேசபக்தர்களின் பேரிலும், கதர், ராட்டினம். மதுவிலக்கு, தீண்டமை ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை சிறை வாசம் முதலியவைகளைப்பற்றியும் அரிய கருத்துகளைக் கொண்ட சிறந்த பாடல்கள் அடங்கியுள்ளன சொற்பபிரதிகளே அச்சிட்டிருப்பதால் புத்தகத்துக்கு முந்துங்கள்.

இதன் விலை அணா 6

காஜி அன்வர் பாஷா ஜீவிய சரித்திரம் விலை அணா 4

லாம்ஸன் உடன் படிக்கை விலை அணா 2

இது வரையில் வெளி வராத மாதிரி பிலவர் பார்டருடன் கூடிய காஜி முஸ்தபா கமால் பாஷா அவர்களின் ஹாப் டோன் படம் 1க்கு பைசா 6. டஜன் 1க்கு அணா 5. 100 க்கு ரூ 2.

இ. செ. முகம்மது இபுராஹீம்.

புத்தக வியாபாரம் புதுமண்டபம் மதுரை.